தமிழக

அகழாய்வுகள்

# நெடுங்கூர்

## (2006-2007)

பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் **சீதாராம் குருமூர்த்தி**, இ.ஆ.ப,

முதன்மை ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் நா. மார்க்சியகாந்தி

இரா. செல்வராஜ்

நாக. கணேசன்

வெ. இராமமூர்த்தி

பெ. கௌதமபுத்திரன்

தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு, சென்னை- 8

2008

முதற்பதிப்பு : 2008

பதிப்பு எண் : 199

பிரதிகள் : 500

நெடுங்கூர் அகழாய்வு 2006 -2007

உரிமை :

தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு

எழும்பூர், சென்னை - 600 008.

விலை : ரூ. 66.00

அச்சிட்டோர் : தொல்லியல் துறை அச்சகம்
தமிழ்நாடு அரசு
எழும்பூர், சென்னை - 600 008.

முனைவர் சீதாராம் குருமூர்த்தி, இ.ஆ.ப,
முதன்மை ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
எழும்பூர், சென்னை- 8.

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, ஆண்டுதோறும் தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு அரிய தொல்பொருட்களை வெளிகொணர்ந்து அவற்றை அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் நூலாக வெளியிட்டும் வருகின்றது. 2006-2007-ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், மாங்குளம் மற்றும் கரூர் மாவட்டம், நெடுங்கூர் என்ற இடஙக்ளில் அகழாய்வு மேற்கொண்டது. அவ்வகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களையும், கண்டு பிடிப்புகளையும் தொகுத்து ஆய்வறிக்கையாக நூல் வடிவில் துறை வெளியீடாக வெளியிடப்படுகின்றது.

நெடுங்கூர் அகழாய்வில் முனைவர் நா. மார்க்சியகாந்தி, திரு. இரா. செல்வராஜ், திரு. நாக. கணேசன், திரு. வெ. இராமமூர்த்தி, திரு. பெ. கௌதமபுத்திரன் ஆகியோர் பங்கேற்றனர். அகழாய்வு செய்ய இடத்தேர்வு காண்டூர் சர்வேயில் பாதுகாப்புப் பிரிவு அலுவலர்கள் திருவாளர்கள் இரா.நாராயணன், த. தங்கவேல் கா.ஒளிமாலிக், ம.அருண் மற்றும் ஐ.பெருமாள்சாமி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நூலைச் சிறப்பாகச் செப்பம் செய்து நூலாக்கத்திற்கான அனைத்துப் பணிகளையும் செய்த முனைவர் சீ.வசந்தி, அகழாய்வாளர் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந் நூலில் பானை ஓடுகள் குறித்த விவரங்களையும், வரைபடங்களையும் வரைந்தளித்த திரு. எஸ்.செல்வராஜ் அவர்களுக்கும் நூலூக்கான படங்களையும், நூல் அட்டையையும் வடிவமைத்த நிழற்படமெடுப்பவர் திரு.மு.த. ஸ்ரீதரன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். இத்துறை அச்சகத்தில் அச்சிட துணை புரிந்த அச்சுப் பிரிவினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

தமிழக வரலாற்று ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இந்நூல் பெரும் பயன் அளிக்கும் என நம்புகிறேன்.

சீதாராம் குருமூர்த்தி, இ.ஆ.ப.,

# உள்ளடக்கம்

பக்க எண்

பதிப்புரை

1. நெடுங்கூர் வரலாறு 7

2. அகழாய்வுக் குழிகள்

(அ) வாழ்விடங்கள் (NDR–I, NDR-II, NDR-III, NDR-IV) 10

(ஆ) ஈமக்காடு (NDR – MEG-I) 13

3. பண்பாட்டுக் காலங்கள் 19

4. பானை ஓடுகள் 24

5. தொல்பொருட்கள் 57

6. முடிவுரை 61

அட்டவணைகள் 63

1. தொல்பொருட்கள்

2. பானை ஓடுகளின் ஆய்வு

3. கரூர் மாவட்டத்தில் பெருங்கற்சின்னங்கள்

இணைப்பு

1. கரூர் மாவட்ட வரைபடம்

2. அரவக்குறிச்சி வட்ட வரைபடம்

3. நெடுங்கூர் வரைபடம்

4. அகழாய்வுக் குழிகளைக் காட்டும் வரைபடம்

5. தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்களின் பட்டியல்

6. மட்பாண்ட ஓடுகள் வரைபடங்கள்

7. நிழற்படங்கள்

# நெடுங்கூர்

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டத்தில் கரூரிலிருந்து கோவை செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் தென்புறம், கரூரிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் நெடுங்கூர் அமைந்துள்ளது. இவ்வூர் சிற்றூராக தற்போது காணப் பட்டாலும் கி.பி. 4 -ஆம் நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்த பெருநகராக விளங்கியிருக்கக்கூடும். அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்கள் விட்டுச் சென்ற வரலாற்று எச்சங்கள் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் நூற்றுக்கு மேற்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கல்வட்டங்களும் கற்குவியலுடன் கூடிய கற்பதுக்கைகளும் காணப்படுகின்றன. சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் அம்மக்களின் வாழ்விடப் பகுதி அமைந்திருந்தமைக்கான தடயங்கள் நத்தமேட்டுப் பகுதியில் காணப்படுகின்றன. இந்நத்தமேட்டில் பளபளப்பான சிவப்பு மட்பாண்ட துண்டுகளும், கறுப்பு சிவப்பு மட்பாண்ட துண்டுகளும், இரும்பு கழிவுகளும், கறுப்பு வண்ண மட்பாண்ட துண்டுகளும் மேற்பரப்பாய்வில் கண்டறியப்பட்டன. கல்வட்டங்கள் காணப்படும் ஈமக் காட்டுப்பகுதி நத்தமேட்டின் வடகிழக்கில் மிக அருகாமையில் அமைந்துள்ளது. ஈமக் காட்டுப் பகுதியில் காணப்படும் கல்வட்டங்களை இவ்வூர் மக்கள் ''பாண்டியன் குழி'' என்றும் ''பாண்டியன் வீடு'' என்றும் அழைக்கின்றனர். இங்குள்ள கல்வட்டங்கள் பெரியதும் சிறியதுமாக உள்ளன. 99 அடி சுற்றளவும் 25 அடி விட்டமும் கொண்டவை பெரிய கல்வட்டமாகவும், 45 அடி சுற்றளவும், 12 அடி விட்டமும் கொண்டவை சிறிய கல்வட்டமாகவும் அமைந்துள்ளன. நெடுங்கூரில் பெருங்கற்கால மக்களின் வாழ்விடப் பகுதியும் ஈமக் காட்டுப் பகுதியும் கூடுதலான பரப்பளவுடன் காணப்படுகின்றன. இவ்வூர் மேலைக் கடற்கரையிலிருந்து பாலக்காட்டு கணவாய், சூலூர், காங்கேயம், கருவூர், உறையூர் வழியாக கீழைக் கடற்கரையிலுள்ள காவிரிப் பூம்பட்டினத்திற்கு சென்ற பண்டைய வணிகப் பெருவழியான கொங்கப் பெருவழியில் அமைந்துள்ளது. இப்பெருவழியைப் போன்று வடஇந்தியாவிலி ருந்து கருவூர் வழியாக கன்னியாகுமரி வரை தட்சிணபதம் (தெற்குப் பெருவழி), தென்னிந்தியாவை நோக்கி வந்ததாக கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார். இவ்விரு பெருவழிகளின் சந்திப்பில் அமைந்துள்ள கரூர் கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து ரோம், கிரேக்கம் போன்ற வெளிநாடுகளோடும்,

வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் அமைந்திருந்த மகத, சோழ, பாண்டிய பேரரசுகளோடும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததை அமராவதி ஆற்றுப் படுகையில் கண்டறியப்பட்ட காசுகளிலிருந்தும் கருவூர் அகழாய்வில் கண்டறியப்பட்ட தொல்லியல் சான்றுகளிலிருந்தும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

கி.மு.1-ஆம் நூற்றாண்டில் சேர நாட்டை ஆண்ட உதியஞ்சேரல் என்ற சேர மன்னனின் மகன் யவனரை (ரோமானியர்) வெற்றி கண்டான் என்று பதிற்றுப்பத்தின் பதிகம் இரண்டில் குறிப்பிடப்படுவதால் ரோமானியரோடு சேர நாட்டிற்கிருந்த தொடர்பு அறியப்படுகிறது. கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் கருவூரைத் தலைநகராகக் கொண்டு சேரமன்னர்கள் ஆட்சி புரிந்தமை கோ ஆதன் செல்லிரும்பொறை, பெருஞ்சேரலிரும்பொறை (பெருங்கடுங்கோ), இளஞ்சேரல் இரும்பொறை (இளங்கடுங்கோ) ஆகியோரை பற்றி பொறிக்கப் பட்டுள்ள கரூர் புகழிமலை சமணர் படுக்கை தமிழ் பிராமி கல்வெட்டிலிருந்தும், கரூர் நகரில் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வில் கிடைத்த தொல்லியல் சான்றுகளிலிருந்தும், அமராவதி ஆற்றுப்படுகையில் கண்டறியப் பட்ட சேர மன்னர்களாகிய மாக்கோதை, கொல்லிப் பொறை, கொல்லிரும் பொறை உருவமும் பெயரும் பொறித்த காசுகளிலிருந்தும் உறுதிபடுத்தப் பட்டுள்ளது. மேலும் புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சங்க இலக்கியங்கள் கரூர் சேர மன்னர்கள் பற்றியும் அவர்கள் அரண்மனைகள் பற்றியும், அம்மன்னர்களின் வெளிநாட்டு தொடர்பு பற்றியும் குறிப்பிட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட அந்நிகழ்வுகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1973-74, 1977, 1979 ஆகிய காலக் கட்டங்களில் கரூரில் மேற்கொண்ட அகழாய்வுகளில் கண்டறியப் பட்ட 26"x16"x4" அளவுள்ள செங்கற்சுவர் (கோட்டைச் சுவர்), ரோமானிய வெள்ளிக் காசு, ரோமானிய மதுஜாடி, ரோமானிய மட்கலன்கள், தமிழ்பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகள் மூலம் உறுதிபடுத்தப் பட்டுள்ளன.

கரூருக்கு மிக அருகாமையில் நொய்யல் ஆற்றின் வடகரையில் பெரு வழிக்கருகில் அமைந்துள்ள கொடுமணல் என்ற ஊரில் பெருங்கற்கால ஈமக்காட்டுப் பகுதியில், அகழாய்வு செய்யப்பட்டது. “கொடுமணம் (கொடு மணல்) பட்ட விணை மான் அருங்கலம் (பதிற்றுப்பத்து : 74)” என்று

அரிசில்கிழார் குறிப்பிடும் கொடுமணலில் பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், மற்றும் வணிகத் தொடர்பு பற்றி அவ்வகழாய்வில் கண்டறியப்பட்ட தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்புகள், கல்மணிகள் போன்ற தொல்லியல் சான்றுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டது. நொய்யல் ஆற்றின் தென்கரையிலும், ஆன்பொருணையாற்றின் வடகரையிலும் கொங்கப் பெருவழியிலும் கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் வணிகத்தில் சிறப்புற்று விளங்கிய கொடுமணலுக்கும் கருவூருக்கும் இடையிலும், வணிகப் பெரு வழிகளின் சந்திப்பாக விளங்கிய சங்ககால சேர மன்னர்களின் தலைநகரான கருவூருக்கு மிக அருகாமையிலும் அமைந்துள்ளது. சங்க இலக்கிய குறிப்புகள், கரூர், கொடுமணல் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டறியப்பட்ட தொல்லியல் சான்றுகள் மற்றும் நெடுங்கூரில் மேற்கொள்ளப் பட்ட மேற்பரப்பு ஆய்வில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் மற்றும் கரூர், கொடுமணலுக்கிடையில் நெடுங்கூர் அமைந்துள்ள அமைவிடத்தையும் கருத்தில் கொண்டு இவ்விரு இடங்களில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களின் வாழ்வியல் வளர்ச்சியின் தாக்கம் நெடுங்கூரில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களிடத்தும் காணப்படலாம் என்ற அடிப்படையில், நெடுங்கூரில் அகழாய்வு மேற் கொள்ளப்பட்டது.

# 2. நெடுங்கூர் அகழாய்வுக் குழிகள் (Trenches)

## அ. வாழ்விடங்கள்

### குழி எண்-1 - (NDR-1) :

நெடுங்கூர் நத்தக் காட்டுப் பகுதியில் NDR-1 அகழாய்வுக்குழி 5 மீ x 4மீ அளவில் அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வகாழ்வுக் குழி 1.60 மீ ஆழம் வரை தோண்டப்பட்டது. இறுதியில் இயற்கை மண் சரளைக் கற்களுடன் செம்மண் கலந்து மொரமொரப்பாக காணப்பட்டதாலும் இப்பகுதியில் மட்பாண்ட ஓடுகளோ தொல்பொருட்களோ கிடைக்காததால் அத்துடன் அகழும் பணி முடித்துக் கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வுக் குழியின் 10 செ.மீ. ஆழம் வரை Humas காணப்பட்டது. 20 செ.மீட்டரிலிருந்து மட்பாண்ட ஓடுகளும் தொல்பொருட்களும் குறியீடுகள் பொறித்த மட்பாண்ட துண்டுகளும் சேகரிக்கப் பட்டன. இவ்வகழாய்வுக் குழியில் சொரசொரப்பான சிவப்பு வண்ண பானை ஓடுகளும், செம்பழுப்பு பூச்சு பூசப்பட்ட சிவப்பு வண்ண மட்கலத்துண்டுகளும், முழுமையும் கருப்பு வண்ண மட்கலத்துண்டுகளும் கருப்பு சிவப்பு மட்கலத் துண்டுகளும், வண்ணம் தீட்டப்பட்ட சிவப்பு மட்கலத்துண்டுகளும் அலங்கரிக்கபட்ட மட்கலத் துண்டுகளும் கண்டறியப்பட்டு சேகரிக்கப்பட்டன. இவ்வகழாய்வுக் குழிகளில் 20 செ.மீ ஆழத்திலிருந்து அதிக எண்ணிக்கையில் கிடைத்த மட்பாண்டத் துண்டுகள் 140 செ.மீட்டரில் முற்றிலும் கிடைப்பது நின்று விட்டது. இவ்வகழாய்வுக் குழியில் நட்சத்திரம் உடுக்கை, முக்கோணக் குறியீடுகள், சூலாயுதம், ஏணி, மலைமுகடு போன்ற குறியீடுகள் பொறித்த மட்பாண்டங்கள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் இரும்புக் கத்தியின் உடைந்த பகுதி, இரும்பு ஆணி, சங்கு வளையல்களின் உடைந்த பகுதி, செம்பு வளையம் போன்ற தொல் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வகழாய்வுக் குழி ஈமக்காட்டுப் பகுதியின் தென் மேற்கில் சுமார் 100 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

### குழி எண்-2 - (NDR-2) :

நத்தக் காட்டுப் பகுதியில் NDR-1, அகழாய்வுக் குழிக்கு மேற்கே 15 மீட்டர் தூரத்தில் 4 மீ x 4 மீ அளவில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வகழாய்வுக் குழி 70 செ.மீ வரை தோண்டப்பட்டது. இதில் 65 செ.மீ வுடன் மட்பாண்ட ஓடுகளும் தொல் பொருட்களும் கிடைப்பது நின்று விட்டது. 65 செ.மீ லிருந்து 70 செ.மீ வரை செம்மண் கலந்து மொர மொரப்பான சரளைக் கற்கள் தொடர்ந்து காணப்பட்டதால் அத்துடன் அகழும் பணி முடிக்கப்பட்டது. மேல் மட்டத்திலிருந்து 5 செ.மீ வரை Humas காணப்பட்டது. 5 செ.மீ.லிருந்து மட்பாண்ட ஓடுகள் அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்டதோடு படிப் படியாக எண்ணிக்கையில் குறைந்து 65 செ.மீ ல் முழுமையும் நின்று விட்டது. இவ்வகழாய்வுக் குழியில் சொரசொரப்பான சிவப்பு வண்ண மட்கலத் துண்டுகளும், சிவப்பு வண்ண மட்கலத் துண்டுகளும் கருப்பு சிவப்பு மட்கலத் துண்டுகளும் முழுமையும் கருப்பு வண்ண மட்கலத் துண்டுகளும், வண்ணக் கோடுகளால் பூசப்பட்ட கருப்பு சிவப்பு மட்கலத் துண்டுகளும், அலங்கரிக்கப் பட்ட மட்கலத் துண்டுகளும் கண்டறியப்பட்டன. இவ்வகழாய்வுக் குழியில் சங்கு வளையல்கள், வடித்தட்டுகள், குறியீடுகளுடன் எழுத்துப் பொறிப்பு காணப்படும் மட்கலத் துண்டு ஒன்றும் தொல்பொருட்களாகச் சேகரிக்கப் பட்டன.

### குழி எண்-3 - (NDR-3) :

இவ்வகழாய்வுக் குழி 4 மீ x 4 மீ என்ற அளவில் அகழ்வுப் பணி மேற் கொள்ளப்பட்டது. NDR-1, NDR-2 ஆகிய அகழ்வுக் குழிகளுக்கு தெற்கே 20மீ தூரத்தில் தோண்டப்பட்டது. இவ்வகழாய்வுக் குழி 160 செ.மீ ஆழம் வரை தோண்டப்பட்டது. 150 செ.மீ உடன் பானை ஓடுகளும், தொல் பொருட்களும் கிடைப்பது முற்றிலும் நின்று விட்டது. 150 செ.மீ ரிலிருந்து 160 செ.மீ வரை சாம்பல் நிற மண் கலந்த சரளைக் கற்கள் காணப்பட்டது. மேற்பரப்பில் 10 செ.மீ ஆழம் வரை Humas காணப்பட்டது. 10 செ.மீ தொடங்கி அதிக எண்ணிக்கையில் கிடைத்த பானை ஓடுகள் ஒரு மீட்டருக்குப் பிறகு படிப்படி யாக குறைந்து 1.50 மீ.ரில் முற்றிலும் நின்று விட்டது. இவ்வகழாய்வில் சொர சொரப்பான சிவப்பு வண்ண பானை ஓடுகளும், செம்பழுப்பு நிறம் பூசப்பட்ட பானை ஓடுகளும், கருப்பு சிவப்பு பானை ஓடுகளும், முழுமையும் கருப்பு வண்ண பானை ஓடுகளும், வண்ணக் கோடுகள் இட்ட பானை ஓடுகளும், அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகளும் கண்டறியப்பட்டன. இவ்வகழாய்வுக் குழியில் உடைந்த இரும்பிலான அம்பு, உடைந்த இரும்பினாலான வாள்,

உடைந்த இரும்பினாலான கத்தி ஆகியவை அதிக எண்ணிக்கையில் (12) கண்டறியப்பட்டு சேகரிக்கப்பட்டன. இவை 15 செ.மீ தொடங்கி 30 செ.மீ வரையுள்ள ஆழத்தில் கிடைத்தன. இவ்வகழாய்வுக் குழயில் 6 மான் கொம்புகள் 90 செ.மீல் தொடங்கி 140 செ.மீ ஆழம் வரை சேகரிக்கப்பட்டன. குறியீடுகள் பொறித்த மட்கலத் துண்டுகளும், சங்கு வளையல்களும் சேகரிக்கப்பட்டன. விலங்குகளின் எலும்புகள் அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்டன.

**குழி எண்-4 - (NDR-4) :**

நெடுங்கூரில் நத்தக் காட்டுப் பகுதியில் அகழ்வுப்பணி மேற்கொள்ளப் பட்ட NDR-1, NDR-2, NDR-3 ஆகிய அகழாய்வுக் குழிகளுக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் நத்த மேட்டுப் பகுதியில் NDR-4 அகழாய்வுக் குழி தோண்டப் பட்டது. 4 மீ x 4மீ என்ற அளவில் அகழாய்வுக் குழி அமைக்கப்பட்டது. இவ்வகழாய்வுக் குழியின் மேற்பரப்பில் 5 செ.மீ ஆழத்திற்கு Humas காணப் பட்டது. 5 செ.மீ லிருந்து பானை ஓடுகள் எண்ணிக்கையில் படிப்படியாக உயர்ந்து 140 செ.மீ க்குப் பின் படிப்படியாக குறைந்து 250 செ.மீ ரில் முற்றிலும் நின்றுவிட்டது. இவ்வகழாய்வுக் குழியில் சொர சொரப்பான சிவப்பு நிற பானை ஓடுகள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன. சிவப்பு நிற பானை ஓடுகளும் கருப்பு சிவப்பு பானை ஓடுகளும் குறைவான எண்ணிக்கையில் கண்டறியப் பட்டன. கருப்பு நிற பானை ஓடுகள் மிகக் குறைந்த அளவிலேயே காணப் பட்டது. இவ்வகழாய்வுக் குழியில் வட்டுகள், சுடுமண் விளையாட்டுப் பொருட்கள், சுடுமண் குழாய், சுடுமண் விளக்கின் உடைந்த பகுதிகள், தக்கிளி, சங்கு வளையல்கள், சுடுமண் மூடி, சுடுமண் சக்கரம், மான் கொம்புகள் போன்றவை தொல்பொருட்களாகச் சேகரிக்கப்பட்டன. விலங்குகளின் எலும்புகள் அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்டன.

ஆ. ஈமக்காடு

# கல்வட்டம் (Cairn Circle)

நெடுங்கூர் தேசிய நெடுஞ்சாலையில் பல கல்வட்டங்கள் (Cairn Circles) காணப்படுகின்றன. இக்கல்வட்டங்கள் உள்ள இடத்தை காருடையான் பாளையம் என்றழைக்கப்படுகிறது. இவ்வூரின் கிழக்கில் முட்புதர்கள் உள்ள தரிசு நிலக்காட்டில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வட்டங்கள் இருந்ததை இப்பகுதிவாழ் மக்களின் வாயிலாக அறிய முடிகிறது. இருப்பினும் தற்பொழுது மூன்று கல்வட்டங்களைத் தவிர பிற கல்வட்டங்கள் முற்றிலும் அழிந்து விட்டன. இம்மூன்று கல்வட்டங்களும் சிதைந்து காணப்படுகின்றன.

## முதலாம் கல்வட்டம் (Cairn Circle)

இக்கல்வட்டம் காருடையாம்பாளையத்திலுள்ள சபரி டெக்ஸ்வாள் நாயக்கன்பாளையம் என்ற ஊருக்குச் செல்லும் வழியில் காணப்படுகின்றது. சபரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு கிழக்கே 200 மீட்டர் தொலைவிலும் நெடுஞ்சாலையிலிருந்து தெற்கில் 150 மீட்டர் தொலைவிலும் இது அமைந்துள்ளது. இக்கல்வட்டத்தின் விட்டம் 9.20 மீட்டர் ஆகும். இக்கல்வட்டத்தை இனி நெடுங்கூர் முதலாம் கல்வட்டம் (NDR Meg-1) என்று அழைக்கப்படும். இக்கல்வட்டம் தற்போதைய பூமி மட்டத்திலிருந்து 80 செ.மீ. உயரத்தில் (Height) உள்ளது.

## கட்டிட அமைப்பு :

இக்கல்வட்டம் நான்கு பெரும் பகுதிகளைக் கொண்டதாக உள்ளது. அவைகள் :

1. வெளி வட்டம் (Outer Circle)
2. உள் வட்டம் (Inner Circle)
3. கல்லறை மற்றும்
4. முற்றம் (Passage) என்ற பகுதிகளைக் கொண்டுள்ளது.

## வெளிவட்டம் (Outer Circle) :

இக்கல்வட்டமானது முழுமையாகக் காணப்படவில்லை. ஆங்காங்கே குறிப்பாக தெற்கிலும் மற்றும் தென்மேற்கிலுமாக கற்கள் காணப்படுகிறது.

இக்கல்வட்டத்திலுள்ள கற்கள் ஒழுங்கற்ற வடிவினிலும் (Irregular shape) மற்றும் வட்ட வடிவிலும் காணப்படுகின்றன. இவ்வட்டத்திலுள்ள கற்கள் வடதிசையிலும் மற்றும் கிழக்கு திசையிலும் முற்றிலுமாக காணப்படவில்லை. அவை இப்பகுதி மக்களால் அகற்றப்பட்டிருக்கக்கூடும். இங்கு காணப்படும் கற்கள் தெற்கில் நான்கு கற்கள் காணப்படுகின்றன. இக்கற்கள் ஒழுங்கற்ற வடிவிலும் சிறிய வடிவிலும் காணப்படுகின்றன. இவற்றின் அகலம் மற்றும் உயரம் முறையே 34 செ.மீ x 30 செமீ; 32 செ.மீ x 20 செ.மீ; 30 செ.மீ x 20 செ.மீ; 16 செ.மீ x 18 செ.மீ. ஆகும். தென்மேற்கில் மூன்று கற்கள் மட்டுமே காணப்படுகின்றன. இம்மூன்றில் இரண்டு கற்கள் பெரிய வடிவிலும் மற்றொரு கல் மிகச் சிறிய வடிவிலும் காணப்படுகின்றன. இக்கற்கள் உருண்டை வடிவிலும் ஒழுங்கற்ற வடிவிலுமாக காணப் படுகின்றன. வட மேற்கில் உள்ள இவ்வட்டத்தில் நான்கு உருண்டை கற்கள் காணப்படுகின்றன. மூன்று கற்கள் சிறிய வடிவிலும் மற்றொரு கல் பெரிய வடிவிலுமாகக் காணப்படுகின்றன. சிறிய கல்லின் அகலம் 28 செ.மீ மற்றும் உயரம் 26 செ.மீ ஆகும். பெரிய கல்லின் அகலம் 68 செ.மீ. உயரம் 62 செ.மீ ஆகும். இவ்வெளிவட்டத்தில் காணப்படும் ஒவ்வொரு கல்லிற்கும் 8 முதல் 10 செ.மீ இடைவெளியில் சீரான அளவில் உருண்டை வடிவ கற்கள் (Boulders) காணப்படுகின்றன.

**உள்வட்டம் (Inner Circle) :**

இக்கல்வட்டமானது வெளிக் கல்வட்டத்திலிருந்து 40-80 செ.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இக்கல்வட்டத்தில் காணப்படும் கற்களானது வெளி வட்டத்தில் உள்ளதைப் போன்று ஒழுங்கற்றதாகவும் உருண்டை வடிவிலும் காணப்படுகின்றன. இவ்வட்டத்தில் உள்ள கற்கள் முழுமையான வட்ட வடிவினில் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. (ஆங்காங்கே சில கற்கள் காணப்படவில்லை) இக்கல் வட்டத்தில் மட்டும் சிறியதும் பெரியதுமாக 51 கற்கள் காணப்படுகின்றன. இதில் 31 பெரிய கற்களாகவும் (Big size) மற்ற கற்கள் சிறியவை மற்றும் மிகச் சிறியவையாகவும் காணப் படுகின்றன. இக்கற்களின் நீளம் மற்றும் உயரம் முறையே 120-56 செ.மீ. ஆகும். இவ்வட்டத்திலுள்ள கற்கள் ஒவ்வொன்றிற்கும் 6 செ.மீ. இடைவெளி உள்ளது.

**கல்லறை :**

கல்லறையானது வெளிவட்டத்திலிருந்து தெற்கில் 290 செ.மீ. தூரத்திலும் உள்வட்டத்திலிருந்து வடக்கில் 276 செ.மீ தூரத்திலும் உள்ளது. இக்கல்லறையிலிருந்து (Cist) உள்வட்டம் (Inner Circle) வரை சிறிய சிறிய கற்களைக் (Cairns) கொண்டு (கூழாங்கற்கள், சுண்ணாம்புக் கற்கள் மற்றும் பலவகையான கற்கள்) குவியலாக இப்பகுதியை சற்று மேடாக அமைத்துள்ளனர். இவ்வாறு அமைப்பதற்கு முக்கிய காரணம் மழைக் காலங் களில் மேல்பகுதியில் பாதுகாப்பாக போட்டிருக்கும் மண்ணை சிதைக்காமல் இருப்பதற்காக மேற்படி சிறிய சிறிய (Cairns) கற்களை மேல் பகுதியில் போட்டு மண் அரிப்பை தடுக்கும் நோக்கத்தோடு அமைத்துள்ளனர். இக்கல்றையானது செவ்வக வடிவில் நான்கு பக்க கற்சுவர்களுடன் (Orthostates) அமைத்துள்ளனர். இக்கல்லறையின் (Trancepted) குறுக்கே கிழக்கு-மேற்காக நீண்ட கல்லை வைத்து (Transcepted Slab) கல்லறை இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இக்கல்லறையின் உயரம் 160 செ.மீ. ஆகும். நான்கு பக்க சுவர் கற்களின் அடியில் ஒரு செவ்வக வடிவ நன்கு செதுக்கப்பட்ட ஒரு பலகைக்கல் அடிக்கல்லாக பாவப்பட்டுள்ளது. இப்பலகைக் கல்லின் மேலேயே கல்லறையின் நான்கு பக்க கற்சுவர்கள் நின்ற நிலையில் காணப்படுகின்றன.

**கல்லறையின் அமைப்பு :**

கல்லறை கிழக்கு மேற்காக நான்கு பக்க கற்சுவர்களுடனும் முன்புறத்தில் முற்றமும் காணப்படுகின்றது. மேற்கில் உள்ள பக்க கல்லின் சுவரின் உயரம் 170 செ.மீ. தெற்கு பகுதியிலுள்ள கல் சுவரின் நீளம் 238 செ.மீ. ஆகும். வடக்கு கல் சுவரின் நீளம் 190 செ.மீ. ஆகும். குறுக்கே இரு அறைகளாக பிரிக்கும் குறுக்கே சுவர் கல்லின் நீளம் 128 செ.மீ. ஆகும். கல்லறையின் கிழக்கு பக்க கற்சுவர் இரண்டு தனித்தனி கற்களாக காணப்படுகின்றது. கல்லறையின் தென்புற அறையின் கிழக்குப் பக்கச் சுவரின் நீளம் 180 செ.மீ. ஆகும். கல்லறையின் வடக்கு அறையிலுள்ள கிழக்குப் பக்க சுவரின் நீளம் 112 செ.மீ. ஆகும். கல்லறையின் வடக்கில் உள்ள கல் சுவர் உடைந்து தன் இருப்பிடத்தை விட்டு சற்று ஒதுங்கிய நிலையில் காணப்படுகிறது.


## முற்றம் (Passage) :

இக்கல்லறையை ஒட்டி கிழக்குப் பகுதியில் இம்முற்றம் காணப்படுகிறது. இம்முற்றமும் செவ்வக வடிவினிலே காணப்படுகிறது. கல்லறையைப் போன்றே முற்றமும் குறுக்குக்கல் (Transcepted Slab) சுவரை வைத்து இரண்டு அறைகளாகப் பிரித்துள்ளனர். கிழக்குப் பகுதியில் உள்ள கல் சுவரின் நீளம் 204 செ.மீ. ஆகும். தென்புறத்தில் உள்ள கல்சுவரின் நீளம் 84 செ.மீ. ஆகும். வடபுறத்திலுள்ள கல்சுவரின் நீளம் 126 செ.மீ. ஆகும். இச்சின்னத்தில் காணப்படும் அனைத்துக் கற்களின் பக்க கனம் 8 செ.மீ.முதல் 10 செ.மீ. ஆகும். இம்முற்றமானது மூன்று பக்க கற்சுவர்களும் (கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு) மற்றும் கல்லறையின் கிழக்குப் பக்கச் சுவரே முற்றத்தின் மேற்குப் பகுதியின் கல்சுவராக உள்ளது. மேற்கு பக்கத்தில் உள்ள கல் சுவரானது இரண்டு தனித்தனி கற்களாக (கல்லறையின் இடுதுளைகள் உள்ள கற்சுவர்) காணப்படுகின்றன. தெற்கு அறையிலுள்ள மேற்குப் பக்க கல் சுவரின் நீளம் 180 செ.மீ. ஆகும். வடக்கு அறையிலுள்ள மேற்குப் பக்க கல் சுவரின் நீளம் 112 செ.மீ. ஆகும். இம்முற்றத்தில் காணப்படும் அனைத்துப் பக்க கற்களும் மணற் கற்களாகும். இதனால் இவை பலமின்றி உடைந்தும் உடைந்து கொண்டேயும் (இதன் காரணமாக அகழாய்வுப் பணியின்போது இரண்டு பக்க கற்களுக்கு இடையே முட்டுக் கொடுத்து பணி மேற்கொள்ளப் பட்டது) இருந்தன. இம்முற்றமும் கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டு மூடுகல் எதுவுமின்றி காணப்படுகிறது.

## இடுதுளை (Port-Hole) :

இடுதுளையானது பொதுவாக அனைத்து கல்லறைகளிலும் கிழக்குப் பக்க கல்சுவரிலேயே காணப்படும் இவ்வாறு காணப்படும் பல்வேறு வடி வங்களில் அதாவது சதுரம், செவ்வகம், வட்டம், அம்புமுனை மற்றும் அறு கோண வடிவங்களில் காணப்படுகின்றன. அம்புமுனை வடிவ இடுதுளை யானது (Arrow-Head) கொடுமணல் அகழாய்வில் அகழப்பட்ட கல்லறையில் மட்டுமே காணப்படுகிறது. மீதமுள்ள இடுதுளை வடிவங்கள் தமிழகம் மற்றும் கர்நாடகாவில் அகழப்பட்ட கல்லறைகளில் கிடைக்கப்படுகின்றன.

நெடுங்கூர் கல்லறை1ல் (NDR-Meg.-1)லிலும் கிழக்குப் பக்க சுவர் களிலேயே தெற்கு மற்றும் வடக்கு அறைகளில் இரண்டு இடுதுளைகள் தனித்தனியாக காணப்படுகின்றன.




தெற்கு அறையில் உள்ள கிழக்குப் பக்க கல்சுவரில் இடு துளை காணப்படுகிறது. கல்லறையின் தெற்கு சுவரிலிருந்து 30 செ.மீ. தூரத்திலும் வடக்குப் பக்க கல் சுவரிலிருந்து 55 செ.மீ. தூரத்திலும் படத்தில் காட்டிய வடிவினில் காணப்படுகின்றன. மேற்புறம் இவற்றின் நீளம் 30 செ.மீ. மற்றும் அடிப்புற நீளம் 55 செ.மீ. ஆகும். இடுதுளையின் மையப்பகுதியின் உயரம் 45 செ.மீ. ஆகும். செங்குத்தாக இடுதுளையின் உயரம் 55 செ.மீ. ஆகும். இவ்விடுதுளையானது தெற்கு அறையில் உள்ள கிழக்குப் பக்க கல்சுவரின் மேற்புறத்திலிருந்து 45 செ.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

வடக்கு அறையில் உள்ள இடுதுளையானது வட்ட வடிவில் காணப் படுகிறது. தென்புற கல்சுவரிலிருந்து 30 செ.மீ. தூரத்திலும் வடக்கு கல் சுவரிலிருந்து 15 செ.மீ. தூரத்திலும் காணப்படுகின்றது. மேலும் வடக்கு அறை யிலுள்ள கிழக்குப் பக்கச் சுவர் கல்லிலிருந்து 50 செ.மீ. தூரத்தில் இவ்விடுதுளை அமைந்துள்ளது. வட்ட வடிவில் காணப்படும் இவ்விடு துளையின் விட்டம் 50 செ.மீ. ஆகும்.

**மூடுகல் (Capstone) :**

கல்லறையின் நான்கு பக்க கற்களின் மேல் பகுதியில் ஒரு பெரிய கல்லைக் கொண்டு கல்லறையை மூடி உள்ளனர். இம் மூடுகல் மிகவும் சிதைந்தும், ஆங்காங்கே உடைந்தும் காணப்படுகின்றன. இக்கல்லானது ஒழுங்கற்ற வடிவினில் செதுக்கப்படாத (Un-dressed) நிலையில் மிகவும் கனமாகக் காணப்படுகின்றன. மேலும் இக்கல் மணற்கல்லால் ஆனதாகும். (Sand stone). இம் மூடுகல்லின் நீளம் சுமார் 260 செ.மீ., அகலம் 120 செ.மீ. ஆகும். இக்கல்லின் கனம் 10 செ.மீ. முதல் 13 செ.மீ. ஆகும்.

**படையல் பொருட்கள் (Grave Goods) :**

நெடுங்கூரில் அகழப்பட்ட கல்லறையின் அடிக்கல்லில் (Base Slab) அனைத்துப் படையல் பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. கல்லறையின் தெற்கு அறையின் கிழக்கு மூலையில் நான்கு கால்களைக் கொண்ட ஜாடி (Four Legged Jar) ஆழம் குறைவான கிண்ணங்கள் (Shallow cups), கருப்பு நிறத்திலான பெரிய தட்டுகள், இரும்பிலான வாட்கள் (Swords), இரும்பினால் ஆன அம்பு முனைகள் (Iron Arrow-heads), இரும்பு உளிகள், சுடுமண்ணாலான கால் பகுதிகள், கெண்டியின் மூக்குப் பகுதிகள், பிரிமனைகள் (Ring-On-Stand) ஒரு மதுக் குடுவை ஆகியவைகள் கண்டெடுக்கப்பட்டன. கல்லறையின் வடக்கு அறையில் கருப்பு நிறத்திலான பானைகளும் (Black Slipped Pot), சிவப்பு நிற பானைகளும் (Red Slipped Pot), நான்கு கால் ஜாடிகளும் கண்டெடுக்கப்பட்டன. இவ்வறையின் கிழக்கு மற்றும் தெற்கு மூலைகளில் உடைந்த மண் பானையில் வாய்ப்புறம் (Rim Portion) ஒன்றும், சுடுமண்ணாலான கால்பகுதிகளும் (Four Legged Jar) கண்டெடுக்கப்பட்டன. மேலும் உடைந்த நிலையில் குவியலாக இரும்பு துண்டுகளும், உடைந்த இரும்பு கத்தி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன. மேற்படி தொல்பொருட்கள் கல்வட்டத்தின், உள் வட்டத்தில் இருக்க வேண்டிய தொல்பொருட்கள் அனைத்தும் கல்லறையின் வடக்கு மற்றும் தெற்கு அறைகளில் படையல் பொருட்களாக வைக்கப்பட்டுள்ளன. உள் மற்றும் வெளி வட்டங்களில் தொல்பொருட்கள் ஏதும் கண்டெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 3. பண்பாட்டுக் காலங்கள்

நெடுங்கூரின் வடகிழக்குப் பகுதியில் உள்ள நத்தக்காட்டில் NDR-MEG-1, NDR-1, NDR-2, NDR-3 ஆகிய நான்கு அகழாய்வுக்குழிகளும், இந்நான்கு அகழாய்வுக் குழிகளுக்கு மேற்குப் பக்கத்தில் மூன்று கிலோ மீட்டர் தொலை விலுள்ள நத்த மேட்டுப் பகுதியில் NDR-4 என்ற அகழாய்வுக் குழியும் அகழ்வுப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வைந்து அகழாய்வுக் குழிகளிலும் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. ஐந்து அகழாய்வுக் குழிகளிலும் கிடைத்த தொல்பொருட்களைக் கொண்டு காலக் கணக்கீடு செய்யப்பட்டது. அகழாய்வில் கிடைத்த தொல் பொருட்களின் அடிப்படையில் நெடுங்கூர் இரண்டு பண்பாட்டுக் காலங்களைக் கொண்டதாகப் பிரிக்கப் படுகின்றது.

1. முதல் பண்பாட்டுக் காலம்
   (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல்
   கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை)

2. இரண்டாவது பண்பாட்டுக் காலம்
   (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல்
   கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை)

இவ்விரண்டு பண்பாட்டுக் காலங்களின் அடிப்படையில் நெடுங்கூர் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் பகுக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நெடுங்கூரில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் NDR-MEG-1 என்ற அகழாய்வுக்குழி ஈமக்காட்டுப் பகுதியிலுள்ள புதைக்குழியாகும். NDR-MEG-1 அகழாய்வுக் குழியில் கண்டறியப்பட்ட தொல்பொருட்களின் அடிப்படையில் அது உறுதி செய்யப்பட்டுள்ளது. 1.20 மீட்டர் ஆழத்தில் கற்பலகைகளைப் பரப்பி அதன்மீது பலகைக் கற்களைக் கொண்டு நான்கு அறைகள் தடுக்கப்பட்டு மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை கற்பதுக்கை (Transepted cist burial) என்ற வகையைச் சார்ந்த பெருங்கற்கால

பண்பாட்டு ஈமச்சின்னமாகும். இக்கற்பதுக்கையில் பிரிக்கப்பட்ட நான்கு அறைகளில் முதன்மைக் கல்லறைகளாக கருதப்படும் மேற்பக்கத்திலுள்ள இரண்டு அறைகளின் கிழக்குப் பக்கச் சுவரில் கிழக்கு நோக்கி வட்ட வடிவ இடுதுளைகள் (Port Holes) காணப்படுகின்றன. இடுதுளைகளுக்கு முன் உள்ள அறைகளில் வாள், ஈட்டி, அம்பு, அரிவாள், கத்தி, எலும்புத் துண்டுகள் போன்ற தொல்பொருட்கள் கண்டறியப்பட்டன. இடுதுளைகளின் உள்ளே உள்ள முதன்மைக் கல்லறைகளின் கருப்பு சிவப்பு மட்கலன்களும், சிவப்பு வண்ண மட்கலன்களும், செம்பழுப்பு நிறம் பூசிய சிவப்பு வண்ண மட்கலன் களும், கருப்பு மட்கலன்களும், ஐந்து கால்களையுடைய நீள் உருண்டை வடிவ (ஈமப் பேழையும்) ஜாடிகளும் உடைந்த கால் பகுதிகளும் சேகரிக்கப்பட்டன. ஐந்து கால்களையுடைய ஜாடி, செம்பழுப்பு நிறம் பூசப்பட்ட சிவப்பு வண்ணத்தில் காணப்பட்டது. அதன் தோள்பட்டையில் நட்சத்திர குறியீடும் அதனருகில் முக்கோண குறியீடுகளும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இக்குறியீட்டுக் கீரல்களைப் போன்று NDR-1, NDR-2, NDR-3 போன்ற அகழாய்வுக் குழிகளிலும் கிடைத்துள்ளமை காலக்கணக்கீட்டிற்கு பேருதவியாய் அமைந்தது. இப்புதைக் குழியில் கண்டறியப்பட்ட தொல் பொருட்களின் அடிப்படையிலும், கற்பதுக்கை அமைக்கப்பட்டுள்ள கட்டிட கலை அடிப்படையிலும் இக்கல்லறையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கல்வட்டத்தின் அடிப்படையிலும் இக்கற்பதுக்கையினை கி.மு. 5 முதல் கி.பி. 1 வரையிலுள்ள முதல் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்தவை எனக் கொள்ளப் பட்டது. பெருங்கற்கால பண்பாட்டு வகையைக் குறிக்கும் இரும்பின் பயனறிந்த மக்கள் வாழ்ந்து இறந்தபின் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையே இக்கற்பதுக்கை யாகும். இரும்பின் பயனறிந்ததால் இரும்புக் காலம் என்றும் இப்பண்பாட்டுக் காலத்தைக் குறிக்கலாம்

### முதல் பண்பாட்டுக் காலத்தின் துணைப் பிரிவு (Period-1A) :

இப்பண்பாட்டுக் காலமும் பெருங்கற்கால பண்பாட்டின் சற்று வளர்ச்சி யடைந்த நிலையைக் காட்டுவதால் இதனை முதல் பண்பாட்டுக் காலத்தின் துணைப் பிரிவு என்று குறிக்கின்றோம். NDR-1, NDR-2, NDR-3 ஆகிய மூன்று அகழ்வு குழிகளிலும் கீழ்க்கண்ட பானை ஓடுகள் அகழ்ந்தெடுக்கப் பட்டன.

1. கருப்பு சிவப்பு மட்கலத்துண்டு
2. சிவப்பு வண்ண மட்கலத்துண்டு
3. செம்பழுப்பு நிற பூச்சுள்ள சிவப்பு மட்கலத்துண்டு
4. முழுமையும் கருப்பு வண்ண மட்கலத் துண்டு.

இவற்றுடன் வண்ணம் தீட்டப்பட்ட (Russet Coated Ware) மட்கலத் துண்டுகளும் இணைந்து காணப்பட்டன. இக்காலக் கட்டங்களில் வண்ணம் தீட்டப்பட்ட மட்பானைகளை தயாரிக்கவும் பயன்படுத்தவும் அறிந்துள்ளனர். இவற்றுடன் முதற் பண்பாட்டுக் காலத்தில் கூறப்பட்ட பெருங்கற்கால பண்பாட்டு வகையைச் சார்ந்த தொல்பொருட்கள் அனைத்தும் இக்கால நிலையில் இணைந்தே காணப்பட்டன. இவற்றில் குறியீடுகள் பொறித்த மட்கலத் துண்டுகளும், தமிழி எழுத்துக்கள் போன்ற எழுத்துப் பொறிப்புக்களும் குறியீடுகளும் உள்ள மட்கலத் துண்டுகளும் கண்டறியப்பட்டன. குறியீடு களுடன் எழுத்துப் பொறிப்புகள் காணப்படும் மட்கலத்துண்டுகள் நெடுங்கூருக்கு அருகாமையில் உள்ள கொடுமணல் அகழாய்விலும் கிடைத் துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கதாகும். இப்பண்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மனிதன் முதற் பண்பாட்டுக் காலத்தில் (கி.மு. 5 முதல் கி.பி. 4 வரை) வாழ்ந்த மனிதனின் பண்பாடு பழக்க வழக்கம், தொழில் நுட்பம், வேட்டையாடுதல், கூடி வாழ்தல் போன்றவற்றை பெற்றிருந்ததோடு கூடுதலாக மட்பாண்டங்களில் பலவித வண்ணம் தீட்டி மட்பாண்டங்களை அழகுப்படுத்தும் தொழில் நுட்பத்தையும் அறிந்திருந்தான். அதனால் இப்பண்பாட்டுக் காலத்தை பெருங் கற்கால பண்பாட்டின் முதற்பண்பாட்டுக் காலத்தின் வளர்ச்சியுற்ற நிலையாக கருதப்படுகிறது. எனவே. கி.பி. 1-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்தின் முதல் பண்பாட்டில் துணைப் பண்பாட்டுப் பிரிவாக இப்பண்பாட்டுக் காலத்தைப் பகுக்கலாம்.

**இரண்டாவது பண்பாட்டுக் காலம் :**

நெடுங்கூரில் மேற்கொள்ளப்பட்ட NDR-MEG-1, NDR-1, NDR-2, NDR-3 ஆகிய அகழாய்வுக் குழிகளுக்கு மேற்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவில் நத்தமேட்டுப் பகுதியில் NDR-4 என்ற அகழாய்வுக் குழி போடப் பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வுக் குழியில் சிவப்பு வண்ண

மட்கலத்துண்டுகளும், செம்பழுப்புநிறம் பூசப்பட்ட சிவப்பு மட்கலத் துண்டுகளும், சொரசொரப்பான சிவப்பு மட்கலத்துண்டுகளும் அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்டன. இவற்றுடன் சங்கு வளையல்கள், தக்கிளி, விளையாட்டுப் பொருட்கள், வட்டுகள், சுடுமண் காதணிகள், சுடுமண் சக்கரத்தின் உடைந்த பகுதிகள், துளையுடன் கூடிய சுடுமண் சக்கரம், மணிகள் போன்ற தொல்பொருட்களும் கண்டறியப்பட்டன. இத்தொல்பொருட்களைக் கொண்டு இப்பகுதியில் வரலாற்றுக் கால மக்கள் வாழ்ந்துள்ளமை உறுதி செய்யப்படுகிறது. இக்காலக் கட்டம் இரண்டாவது பண்பாட்டுக் காலமாகும். கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையுள்ள வரலாற்றுக் காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய தொல் பொருட்களே கிடைத்துள்ளதால் இக்காலக் கட்டத்தை இரண்டாவது பண்பாட்டுக் காலம் என்று பிரிக்கலாம்.

முதல் பண்பாட்டுக் காலம் (Period–I ) (கி.மு. 5 - கி.பி.1)

1. கருப்பு சிவப்பு மட்கலன்கள் (Black and Redware)
2. முழுமையும் கருப்பு வண்ண மட்கலன்கள் (Blackware)
3. செம்பழுப்பு நிறம் பூசப்பட்ட சிவப்பு வண்ண மட்கலன்கள் (Red slippedware)
4. சொரசொரப்பான சிவப்பு வண்ண மட்கலத்துண்டுகள் (Coarse Redware)
5. குறியீடுகள் கீறப்பட்ட மட்கலத்துண்டுகள் (Graffitti Marks Ware)
6. இரும்புப் பொருட்கள் (Iron Objects)
7. மான் கொம்புகள் ((Deer Horns)
8. எலும்புகள் (Bones)

முதல் பண்பாட்டுக் காலத்தின் துணைப் பிரிவு (Period–IA)
(கி.பி. 1 - கி.பி. 3)

1. வண்ணம் தீட்டப்பட்ட மட்கலத் துண்டுகள் (Russet Coated Ware)
2. கருப்பு சிவப்பு மட்கலத் துண்டுகள் (Black and Redware)

3. முழுமையும் கருப்பு வண்ண மட்கலத் துண்டுகள் (Blackware)
4. செம்பழுப்பு நிறம் பூசப்பட்ட சிவப்பு வண்ண மட்கலத் துண்டுகள் (Red Slipped Ware)
5. குறியீடுகள் மற்றும் எழுத்துப் பொறிப்புள்ள மட்கலத் துண்டுகள் (Graffitti Marks and Scripts Ware)
6. இரும்புப் பொருட்கள் (Iron Objects)
7. மான் கொம்புகள் ((Deer Horns)
8. எலும்புகள் (Bones)

இரண்டாவது பண்பாட்டுக் காலத்தின் துணைப் பிரிவு (Period–II) (கி.பி. 4 - கி.பி.10)

1. சிவப்பு வண்ண மட்கலத் துண்டுகள் (Redware)
2. செம்பழுப்பு நிறம் பூசப்பட்ட சிவப்பு வண்ண மட்கலத் துண்டுகள் (Red Slipped Ware)
3. சொரசொரப்பான சிவப்பு வண்ண மட்கலத் துண்டுகள் (Coarse Red Ware)
4. சுடுமண் சக்கரம், தக்கிளி, காதணிகள், விளையாட்டுப் பொருட்கள், புகைப்பான்
5. சங்கு வளையல்கள், மணிகள்

# 4. பானை ஓடுகள் (Potteries)

மனிதன் வளர்ச்சியடைந்து தனக்கென தனி இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு வாழத் தொடங்கிய பொழுது முதன் முதலில் அவன் தயாரித்தது மண்ணாலான பொருட்களே. பின்னர் வளர்ச்சி மாற்றத்தின் பொழுது அவற்றை நெருப்பிலிட்டு சுட்டு நிலையான பயன்பாட்டிற்கு கொண்டு வந்தான். உலகில் அனைவருக்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய மண்ணை சுத்தப்படுத்தி தன் தேவைகளுக்கு ஏற்ப மட்பாண்டங்களை செய்து கொண்டான். காலப்போக்கில் அவற்றில் வண்ணங்களை தீட்டியும் பளபளப்பூட்டியும் தன் கைவண்ணத்தைக் கொண்டு பல்வேறு வடிவங்களில் மட்பாண்டங்களில் அலங்கரிப்பு செய்து பயன்படுத்தினான். அம்மனிதன் அறிந்த தொழில்நுட்ப வளர்ச்சியின் வெளிப் பாடாக அவை வெளிப்பட்டன. மட்பாண்டங்களை வனைந்து தன் தொழிற் நுட்ப வளர்ச்சிக்கேற்ப அலங்காரங்களை செய்து வண்ணம் தீட்டி தன் தேவைக் கானவற்றை செய்து கொண்டான். பிறகு தனக்குரிய அல்லது தன்னால் செய்யப்பட்ட மட்பாண்டங்களில் தன்னைக் குறிக்கும் அல்லது தன் இனக் குழுவைக் குறிக்கும் குறியீடுகளை கீறல் செய்து பயன்படுத்தினான். எழுத்துக்கள் வடிவம் பெற்று பயன்பாட்டிற்கு வரும் வரை இத்தகைய குறியீடுகள் கருத்துப் பரிமாற்றத்திற்கான இடுகுறிகளாக பயன்படுத்தப் பட்டுள்ளன. எழுத்து பொறிப்புகள் பயன்பாட்டிற்கு வந்தபொழுது குறியீடு களுடன் எழுத்துக்களையும் கீறல் செய்து தன் கருத்துக்களை பறிமாறிக் கொண்டனர். பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மக்கள் இத்தகைய மட்பாண்டங்களை தங்களது பயன்பாட்டில் கொண்டிருந்ததை நெடுங்கூர் அகழாய்வில் கிடைக்கும் மட்பாண்டங்களைக் கொண்டு உறுதி

செய்யப்படுகிறது. நெடுங்கூர் அகழாய்வில் கிடைத்த மட்கலத் துண்டுகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துப்பட்டுள்ளது.

1. கருப்பு சிவப்பு மட்கலத் துண்டுகள் (Black and Red Ware)
2. முழுமையும் கருப்பு வண்ண மட்கலத் துண்டுகள் (Black Ware)
3. செம்பழுப்புப் பூச்சுப் பூசிய சிவப்பு மட்கலத் துண்டுகள் (Red Slipped Ware)
4. வண்ணம் தீட்டிய சிவப்பு மட்கலத் துண்டுகள் (Russet Coated Ware)
5. சொரசொரப்பான சிவப்புநிற மட்கலத் துண்டுகள்

## 1. கருப்பு-சிவப்பு நிற பானை ஓடுகள் :

இக்கருப்பு சிவப்பு நிற ஓடுகள் கல்லறையில் உள்ள தெற்கு மற்றும் வடக்கு அறைகளில் காணப்படுகின்றன. இவ்வோடுகளில் சிவப்பு கருப்பு நிற ஓடுகள் மெல்லியதாகவும், மிகவும் மெல்லியதாகவும் மற்றும் கனமானதாகவும் காணப்படுகின்றன. இதனின் மேற்பகுதிகள் வழுவழுப்பானதாகவும் (Slip) மற்றும் சொரசொரப்பாகவும் (Coarse) உள்ளன. மேலும் மேற்புறம் சிவப்பு நிறத்திலும் உட்புறத்தில் கருப்பாகவும் இருக்கும். இவ்வோடுகள் பெரிய பானைகளாகவும் சிறிய கிண்ணங்களாகவும் கிடைக்கின்றன. இவ்வோட்டின் மேற்பகுதியில் பானைக் குறியீடுகள் (Graffiti Marks) காணப்படுகின்றன.

## 2. சிவப்பு நிற ஓடுகள் :

இந்நிற ஓடுகள் மேற்புறத்திலும் உட்புறத்திலும் சிவப்பு நிறமாக காணப் படும். இவ்வோட்டின் மேற்புறத்தில் வழுவழுப்பாகவும் மற்றும் சொரசொரப்

பாகவும் காணப்படுகின்றன. இக்கல்லறையில் உள்ள அறைகளில் கண்டெடுக்கப்பட்ட சிவப்பு நிற ஓடுகள் மிகப் பெரியதாகவும் (Big Size), கழுத்துப் (Shoulder) பகுதி மற்றும் வாய்ப்புறத்தில் (Rim Portion) பல்வேறு அமைப்புகளில் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன. இச்சிவப்பு நிற பானைகள் தண்ணீர் மற்றும் தானியங்களை பாதுகாப்பாக சேமித்து வைக்கும் கலங்களாக பயன்பட்டிருக்கலாம். மேலும் ஒரு சில ஓடுகளின் மேற்புறங்களில் பானை குறியீடுகளும் (Graffiti Marks) காணப்படுகின்றன.

### 3. கருப்பு நிற ஓடுகள் :

நெடுங்கூர் அகழாய்வு கல்லறை அறைகளில் கருப்பு நிற ஓடுகள் பல கண்டெடுக்கப்பட்டன. இவ்வோடுகள் கனமானதாகவும் இருபுறங்களிலும் கருப்பு நிறத்திலும் மற்றும் வழுவழுப்பாகவும் காணப்படுகின்றன. கல்லறையில் உள்ள அறைகளில் கருப்பு நிற ஓடுகள் அதிகளவில் கிடைக்கின்றன. இவைகள் நீரை சேமித்து வைக்கும் பானைகளாகவும் சமையல் பாத்திரங்களாகவும், கின்னங்களாகவும் மற்றும் பிரிமனைகளாகவும் பயன்பாட்டில் இருந்திருக்கலாம்.

### 4. வண்ணம் தீட்டிய சிவப்பு மட்கலத்துண்டுகள் (Russet Coated Ware):

இக்கல்லறையில் உள்ள அறைகளில் இவ்வகையான ஓடுகள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் கண்டெடுக்கப்பட்டன. இவ்வகையான பானைகள் பெரும்பாலும் மண்டைகளாகவும் (Bowls) கிண்ணங்களாகவும் மற்றும் சமையல் பாத்திரங்களாகவும் பயன்பாட்டில் இருந்தது. இப்பானை ஓட்டின்

மேற்புறம் சிவப்பு நிறத்திலும் உட்புறத்தில் கருப்பு நிறத்திலும் மேலும் வழுவழுப்பானதாகவும் காணப்படுகின்றன. இவ்வோட்டின் மேற்புறத்தில் வெள்ளை நிறத்தில் பல்வேறு வடிவங்களில் (Geometrical Designes) கோடுகள் வரையப்பட்டுள்ளன. இக்கோடுகள் செங்காவி (Red Ochre) நிறத்திலேயே வரையப்பட்டுள்ளன. இவ்வகையான பானைகள் கொங்கு நாட்டில் பரவலாகவும் மிகவும் அதிகமாகவும் காணப்படுகின்றன. தமிழகத்தில் பல இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் மேற்படி பானைகள் ஓடுகள் கிடைத்தாலும் கிடைக்கின்ற அளவு மிகவும் குறைவான அளவேயாகும். ஆதலால் இப்பானையை 'கோவை மட்பானை' என்று அழைப்பதில் தவறேது மில்லை. மேற்படி அனைத்து மட்பாண்ட ஓடுகளும் நன்கு சுடப்படாமல் (Illfired) அறைகுறையாக சூளையில் (kiln) சுடப்பட்ட காரணத்தினால் கல்லறையிலே ஓடுகள் மிகவும் நொறுங்கிய நிலையிலேயே (Fragile Condition) காணப் படுகின்றன. இவ்வாறு இவைகள் நொறுங்கிய நிலையில் காணப்படுவதற்கு முக்கிய காரணம் கல்லறையின் வடக்கு மற்றும் தெற்கு அறையில் வைக்கப் பட்டுள்ள படையல் பொருட்களின் மேலே மண் மற்றும் சலித்த மண்ணைக் கொண்டும் கருங்கற்கள் மற்றும் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டும் படையல் பொருட்களை மூடியதன் காரணமாக (படையல் பொருட்களை பாதுகாப்பாக வைக்கும் நோக்கத்தோடு) அனைத்து படையல் பொருட்கள் சிதைந்து உருக்குலைந்து காணப்படுகின்றன.

### 1. கருப்பு சிவப்பு மட்கலத்துண்டுகள் (Black and Red Ware)

இவ்வகை மட்கலத் துண்டுகள் வெளிப்புறம் சிவப்பு நிறத்திலும் உட்புறம் கருப்பு நிறத்திலும் காணப்படும். வண்ணம் தீட்டுதல் மட்கலங்களை

சுடுவதற்கு முன்னும் சுட்ட பின்பும் நடைபெற்றுள்ளது. சுடுவதற்கு முன் வண்ணம் தீட்டிய மட்கலங்களை உருண்டை வடிவ கல்லாயுதம் கொண்டு மெருகேற்றி பளபளக்கச் செய்து நெருப்பிலிட்டு சுட்டு அம்மட்பாண்டங் களுக்கு வலுவூட்டி அதன் பின்னரே அவற்றைப் பயன்படுத்தியிருந்தனர். காலம் மாற்றத்திற்கேற்ப தங்களின் வாழ்வில் வாழ்க்கை அனுபவத்தில் கிடைத்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி புதிது புதிதாக மட்பாண்டங்கள் செய்ய கற்றுக்கொண்டனர். இத்தகைய மட்பாண்ட துண்டுகள் நெடுங்கூர் அகழாய்வில் அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்டு சேகரிக்கப்பட்டன. பகுப்பாய்வின் பொழுது சேகரிக்கப்பட்ட குறிப்பிட்ட மட்பாண்ட தூண்களின் அமைப்பு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் விரிவாகக் காணலாம்.

1. கூர்மையான விளிம்பும் அகன்ற வாய்ப்பகுதியும் கொண்ட குவளை.

2. மளமளப்பான தடித்த விளம்பைக் கொண்ட அகன்ற குவளை.

3. கூர்மையான விளிம்புடன் அகண்ட வாய்ப்பகுதியும் கொண்ட குவளை. இதன் வெளிப்புறத்தில் செம்பழுப்பு வண்ணக் கோடுகள் வரையப்பட்டுள்ளன.

4,5 கூர்மையான விளிம்பும் அகண்ட வாய்ப்பகுதியையும் கொண்ட குவளைகள்.

6,7 இவை இரண்டும் வெளிப்புறம் சற்று விரிந்த நிலையிலும் கூர்மையான விளிம்பும் அகண்ட நீள் கழுத்துப் பகுதியுடன் கூடிய குடுவை.

8. கூர்மையான விளிம்புடைய அகண்ட வாய்ப்பகுதியுடன் கூடிய குவளை.

9. கூர்மையான விளிம்புடைய அகண்ட வாய்ப்பகுதியுடன் கூடிய குடுவை. இதன் வெளிப்புறத்தில் விளிம்பிற்கு கீழே சிறிய கோடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
10. கூர்மையான விளிம்புடைய சற்று சாய்வான விரிந்த வாய்ப்பகுதியைக் கொண்ட குவளை.
11. கூர்மையான விளிம்புடைய சிறிய குடுவை.
12. தடித்த விளிம்புடன் கூடிய அகன்ற பள்ளமான தட்டு வடிவில் அமைந்த மூடி.
13. தடித்த உருண்டையான விளிம்பு கொண்ட மூடி.
14. கூர்மையான விளிம்பு கொண்ட தடித்த அகண்ட மூடி.
15. மழுங்கிய தடித்த கோப்பை. இக்கோப்பையின் வெளிப்புறத்தில் செம்பழுப்பு வண்ண கோடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## 2. முழுமையும் கருப்பு வண்ண மட்கலத் துண்டுகள் (All Black Ware)

இவ்வகை மட்கலத்துண்டுகள் முழுமையும் கருப்பு நிறத்தில் அமையப் பெற்றவை. மட்பாண்டத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் கருப்பு வண்ணம் காணப்படும். பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மனிதன் தான் அறிந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தன் தேவைக்கான மட்பாண்டங்களை மெருகூட்டியும் அலங்கரிப்பு செய்தும் பயன்படுத்தி யுள்ளான். இவ்வகையில் தட்டு, மூடி, பிரிமனை, கலயம், குவளை, குடுவை போன்ற மட்பாண்டங்களைச் செய்து பயன்படுத்தியுள்ளான். நெடுங்கூர் அகழாய்வில் கண்டறிந்து சேகரிக்கப்பட்ட அத்தகைய மட்பாண்டங்கள் பற்றி விரிவாகக் காணலாம்.

1. விரிந்த கூர்மையான அகன்ற கழுத்துப் பகுதியும், வட்ட வடிவில் அமைந்த அடிப்பகுதி அகண்ட பிரிமனை. இப்பிரிமனை மட்பாண்டங்களை தாங்கும் தாங்கிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிமனையின் கழுத்துப் பகுதியில் பட்டையான மூன்று கோடுகள் இணையாக வரையப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

2. விரிந்த கூர்மையான அகன்ற மேல்பகுதியும் குறுகிய வட்டவடிவ கழுத்துப் பகுதியும் அகன்ற வட்ட வடிவ அடிப்பகுதியையும் கொண்ட கருப்பு வண்ண பிரிமனை வகையாகும். சுட்டு தயாரிக்கப்பட்ட இவ்வகை மட்கலத்தாங்கி (Pot Ring Stand) யின் கழுத்துப் பகுதியில் நான்கு இணைக் கோடுகளால் அலங்காரம் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

3,4 தடித்த விளிம்பும் அகண்ட வாய் பகுதியும் கொண்ட மட்பாண்டங் களின் மூடிகளாகப் பயன்படுத்தப்படும் தட்டுகளாகும். இத்தகைய தட்டுகள் மட்பாண்டங்களின் வாய்ப் பகுதிகளுக்கேற்ப வடிவமைக் கப்பட்டு அவற்றை மூடுவதற்காக பயன்படுத்தப்பட்டவையாகும்.

## 3. செம்பழுப்பு பூச்சுப் பூசிய சிவப்பு மட்கலத் துண்டுகள் (Red Slipped Ware)

இவ்வகை மட்கலத் துண்டுகள் வெளிப்புறத்தில் செம்பழுப்பு வண்ணத்தைக் கொண்டு முழுவதும் பூசப்பட்ட பளபளப்பான சிவப்பு மட்கலத் துண்டுகளாகும். இவ்வகையில் பெரும்பாலும் அகன்ற வாய்ப் பகுதியையும் தடிமனான விளிம்புப் பகுதியையும் கொண்ட மட்கலங்கள் நெடுங்கூர்

அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவை தானியங்களை சேமித்து வைப்பதற்கும் நீர் போன்ற திரவப் பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும். நெடுங்கூர் அகழாய்வில் சேகரிக்கப்பட்ட அத்தகைய மட்பாண்டத் துண்டுகளில் சில அலங்கரிக்கப்பட்டவைகளாகவும் காணப்படுகின்றன.

1. தடித்த கூர்மையான விளிம்பும் அகன்ற வாய்ப்பகுதியும் கொண்ட மட்கலன். இதன் கழுத்துப் பகுதியில் இரண்டு இணைக் கோடுகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

2. தடித்த அலங்கரிக்கப்பட்ட விளிம்பும் குறுகிய கழுத்தும், கழுத்துக்குக் கீழே சிறிய புடைப்புப் பகுதியும், நகத்தால் அலங்கரிக்கப்பட்ட பதிவு களும் காணப்படுகின்றன. அதற்கும் கீழே இரண்டு இணைக் கோடுகள் மூலம் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

3. மணி போன்ற அமைப்பில் உருண்டையான விளிம்பு கொண்ட சுடுமண் தாங்கி.

4. தடித்த தட்டையான வெளிப்புறம் நீண்ட விளிம்புடைய மட்கல னாகும். இதன் தோள்பட்டையில் ஆறு இணைக் கோடுகள் மூலம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நான்காவது கோட்டிற்கும் நான்காவது கோட்டிற்குமிடைய வளைந்த கோடுகள் மூலம் அலங்கரிக்கப் பட்டுள்ளது.

5. உருண்டையான மணி போன்ற அமைப்பு உடைய விளிம்பு கொண்ட பெரிய குவளை.

6. தட்டையான வெளிப்புறம் நீண்ட தடித்த விளிம்புடைய அகன்ற குவளை.

7. கூர்மையான தடித்த விளிம்புடைய அகன்ற பானை.

8. வளைவுகளால் அலங்கரிக்கப்பட்ட விளிம்பினைக் கொண்ட அகன்ற வாய்ப்பகுதியை உடைய பானை.

9. வெளிப்புறம் நீண்ட தடித்த பதிவுகளால் அலங்கரிக்கப்பட்ட விளிம்பினைக் கொண்ட பானை. இதன் தோள்பட்டைப் பகுதியில் ஐந்து கோடுகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இரண்டு, மூன்றாவது கோட்டிற்கும் 4,5வது கோட்டிற்கும் இடையே கீழும் மேலும் வளைந்து நெளிந்து செல்லும் கோடுகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.

10. கூர்மையான தடித்த விளிம்பினையுடைய அகன்ற குவளை.

## 4. சொரசொரப்பான சிவப்பு நிற மட்கலத் துண்டுகள் (Coarse Red Ware)

நெடுங்கூர் அகழாய்வில் NDR-IV அகழாய்வுக் குழியில் இத்தகைய மட்கலத் துண்டுகள் அதிக எண்ணிக்கையில் கண்டறியப்பட்டன. இவ்வகை மட்கலன்கள் தடித்த விளிம்பும் அகன்ற வாய்ப்பகுதியும் உயரமானவையாகவும் காணப்படும் மட்பாண்ட வகையைச் சார்ந்தவையாகும். இத்தகைய மட்பாண்டங்கள் தானியங்களை சேமித்து வைப்பதற்கும் தண்ணீர் போன்ற திரவப் பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் பயன்படுத்தியுள்ளனர். இத்தகைய மட்பாண்டங்களில் அலங்காரங்கள் அதிகளவில் காணப்பட்டன.

1. கூர்மையான தடித்த வெளிப்புறம் நீண்ட அகன்ற வாய்ப்பகுதியைக் கொண்ட மண்குடம். இதன் கழுத்துப் பகுதியில் இரண்டு இணைக் கோடுகள் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

2. தடித்த விளிம்புகளின் மேல் நகப்பதிப்புகளால் அலங்காரம் செய்யப் பட்டு விளிம்பின் வெளிப்புறம் நீண்டு காணப்படும் பகுதியில் வளைவு பகுதிகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. அகன்ற வாய் பகுதியையும் சிறிய கழுத்துப் பகுதியையும் கொண்ட மட்கலன் ஆகும்.

3. வெளிப்புறம் வளைந்த உருண்டையான மலைபோன்ற அமைப் புடைய பிடிகளைக் கொண்ட பானை.

4. தடித்த வெளிப்புறமும் உட்புறமும் அகன்ற தட்டையான வளைவு களைக் கொண்ட பிடியை உடைய பெரிய அளவிலான பானை. இதன் பிடியின் ஒரு பகுதியில் வளைவுபதிவுகளால் அலங்காரம் செய்யப் பட்டுள்ளது.

**குறியீடுகள்**

நெடுங்கூர் அகழாய்வில் மொத்தம் 57 குறியீடுகள் வெளிக் கொணரப் பட்டன. இவற்றுள் முழுமையான கீரல்கள் கொண்ட மட்கலத்துண்டுகள் 34 ஆகும். பிற குறியீடுகள் முழுமையும் அறிய முடியாவண்ணம் உடைந்த சிறு மட்கலத் துண்டுகளில் காணப்பட்டன. பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மக்கள் தாங்கள் பயன்படுத்திய மட்கலன்களில் தங்களைக் குறிக்கும் சில குறியீடுகளை தங்களது மட்கலங்களில் கீரல் செய்து பயன்படுத்தி

வந்துள்ளனர். இத்தகைய குறியீடுகளைக் கீறும் வழக்கம் மட்பாண்டங்கள் செய்யப்பட்டு அதனை நெருப்பில் சுட்டு எடுத்து பயன்பாட்டிற்கு வந்த பின்னரே இக்குறியீடுகள் கீறப்பட்டிருக்க வேண்டும். இங்கு கண்டறியப்பட்ட குறியீடுகள் பெரும்பாலும் மட்பாண்டங்களை சுட்ட பின்னரே கீறப்பட்டதாகக் தெரிகிறது. NDR-MEG-1 என்ற ஈமக் குழியில் கண்டறியப்பட்ட நட்சத்திரத்துடன் கூடிய முக்கோணங்கள் வடிவிலான குறியீடுகள் நெடுங்கூர் வாழ்விடப் பகுதியில் அகழாய்வுச் செய்யப்பட்ட NDR-1, NDR-3, ஆகிய அகழாய்வுக் குழிகளிலும் காணப்பட்டது. இக்குறியீடுகள் இனக்குழு வாழ்க்கையில் ஒரு குழுவைக் குறிக்கும் குறியீடாக இருக்கலாம். நட்சத்திரம், மலைமுகடு, மலைமுகடுகளுக் கிடையே வாழ்ந்தவர் பயன்படுத்திய குறியீடாக இதனை குறிப்பர்.

## 2. இரண்டும் இரண்டுக்கும் மேற்பட்ட குறியீடுகளும்.

இரண்டுக்கு மேற்பட்ட குறியீடுகள் நெடுங்கூர் அகழாய்வில் 14 சேகரிக்கப் பட்டன. இரண்டு திரிசூலங்கள், இரண்டு பிறை, இரண்டு ஏணிகள் குறிப்பிடத் தக்கவையாகும். இரண்டு மலை முகட்டிற்கருகில் நட்சத்திரங்கள் பொறிக்கப் பட்டுள்ள குறியீடுகள் ஐந்து சேகரிக்கப்பட்டன. இவை பெருங்கற்காலப் பண்பாட்டு புதை குழியிலிருந்தும், வாழ்விடப் பகுதியிலிருந்தும் சேகரிக்கப் பட்டவையாகும். ஒரே வகையாக குறியீடுகள் ஈமக் குழியிலும் வாழ்விடப் பகுதியிலும் கண்டறியப்பட்டுள்ளதால் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இக்குறியீடுகளுக்குரிய ஒரே இனக் குழுவாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. இரண்டு மலை முகடுகளும் அதனருகில் நட்சத்திரமும் கீரப்பட்டுள்ள குறியீடு களின் மூலம் இரு மலைகளுக்கிடையே வாழ்ந்த ஒரே இனக் குழுவை குறிப்பதாக இக்குறியீடுகளை கருதலாம்.

## 3. குறியீடுகளும் எழுத்துப் பொறிப்புகளும்

மலை முகட்டின் ஒரு பகுதியும் அதனருகில் தமிழி எழுத்துக்களைக் குறிக்கும் எழுத்துப் பொறிப்பு போன்ற கீறல்களும் கீறப்பட்ட மட்கலத்துண்டு ஒன்று கண்டறியப்பட்டது. இது போன்று குறியீடுகளும் எழுத்துப் பொறிப்பு களும் கீறப்பட்ட மட்கலத் துண்டுகள் மலை முகட்டின் மீது அடர்ந்த காடுகள், ஏணி மற்றும் மலைமுகட்டுடன் கூடிய அடர்ந்த காடும் அதனருகில் எழுத்துப் பொறிப்பும் ஆகிய பல நிலைகளில் குறியீடுகள் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் பெரும்பாலும் மட்பாண்டங்களின் தோள்பட்டை பகுதியிலேயே அதிகளவில் காணப்படுகின்றன. ஒரு சில குறியீடுகள் மட்டும் விளிம்பு களிலும் மட்பாண்டத்தின் அடிப்பகுதியிலும் காணப்படுகின்றது. நெடுங்கூரில் கிடைத்துள்ள குறியீடுகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. தனிக்குறியீடு.
2. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குறியீடுகள்.
3. குறியீடு மற்றும் எழுத்துப் பொறிப்பு.

### 1. தனிக் குறியீடு :

தனிக் குறியீடுகளாக 17 குறியீடுகள் வெளிக் கொணரப்பட்டன. அவற்றில் பெரும்பான்மையான குறியீடுகள் முக்கோண வடிவ குறியீடுகளேயாகும். இவற்றுடன் உடுக்கை, நட்சத்திரம், ஏணி, பிறை, மலை முகடு, அடர்ந்த காடுகள் கொண்ட மலைமுகடு போன்றவை தனிக் குறியீடுகளில் குறிப்பிடத்தக்கவை யாகும். தனிக்குறியீட்டில் இரண்டு முக்கோணங்கள் ஒன்றோடொன்று


இணைந்தது போல எட்டுக் குறியீடுகள் கிடைத்துள்ளன. பெரும்பாலும் இரண்டு கொடுமணல் அகழாய்விலும் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். குறியீடுகளுடன் எழுத்துப் பொறிப்பு காணப்படுவது குறியீட்டினை எழுத்துப் பொறிப்பின் மூலம் விளக்குவதாகவோ அல்லது எழுத்துப் பொறிப்புகள் பயன்பாட்டிற்கு வந்த போது குறியீடுகள் உணர்த்தும் பொருளை குறிப்பதற்காக எழுத்துக்களையும் பயன்படுத்தி இருக்கலாம்.

நெடுங்கூர் அகழாய்வில் அகழப்பட்ட கல்லறையில் கீழ்க்கண்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன.


1. கருப்பு சிவப்பு நிற ஓடுகள் (Black and Red Ware)
2. சிவப்பு நிற ஓடுகள் (Red Slipped Ware)
3. கருப்பு நிற ஓடுகள் (Black Slipped Ware)
4. வண்ணம் தீட்டிய சிவப்பு மட்கலத் துண்டுகள் (Russet Coated Ware).

# 1. கருப்பு சிவப்பு மட்கலத் துண்டுகள்


(BLACK AND RED WARE)




## BLACK AND RED WARE




(6)




(7)




(8)




# BLACK AND RED WARE




(10)




(11)




(12)




(13)




(14)




## 2. முழுமையும் கருப்பு வண்ண மட்கலன்கள்
### (ALL BLACK WARE)




## 3. செம்பழுப்பு பூச்சுப் பூசிய சிவப்பு மட்கலத் துண்டுகள்
### (RED SLIPPED WARE)




①




②




③




4




5




6






8




9




10


# 4. சொரசொரப்பான சிவப்பு நிற மட்கலத் துண்டுகள்
(COARSE RED WARE)




①




②





③




④


R·S 20cm
BKR 40cm
A.K.B. 40cm
R·S 40cm
BKR 40cm
BKR 40cm
RPW 40cm
R·S. 40cm
BKR 60cm
BKR 70
R·S 75cm
R.S. 80cm
R·S 90cm
BKR 85
R·S. 95cm
BKR 90cm
BKR 1·00mt
RPW 1·00mt
BKR 1·10mt
BKR 1·00mt
1·45 BKR
0·95





GRAFFITI WITH INSCRIPTION

BXR 35CM

# 5. தொல்பொருட்கள் (Antiquities) :

நெடுங்கூர் அகழாய்வில் மொத்தம் 24 தொல்பொருட்கள் கண்டெடுக்கப் பட்டன. கண்டெடுக்கப்பட்ட அனைத்து பொருட்களும் கல்லறையிலுள்ள தெற்கு மற்றும் வடக்கு அறையில் வைக்கப்பட்ட தொல்பொருட்களாகும். தெற்கு அறையில் 13 படையல் பொருட்களும் வடக்கு அறையில் 11 தொல் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.

1. இரும்பு பொருட்கள் (Iron Objects)
2. சுடுமண்ணாலான பொருட்கள் (Terracotta Objects)
3. எலும்புத் துண்டுகள் (Bone Pieces)
4. பானைக் குறியீடுகள் (Graffiti Marks) ஆகும்.

## 1. இரும்புப் பொருட்கள் :

நெடுங்கூர் கல்லறை ஒன்றில் கண்டெடுத்த தொல்பொருட்கள் 24ல் 17 தொல்பொருட்கள் இரும்புப் பொருளாகவே கிடைக்கின்றன. அதாவது 71 விழுக்காடாகும். கண்டெடுக்கப்பட்ட 17 இரும்புப் பொருட்களில் சிறிய கத்தி நான்கும், வாட்கள் (Swords) ஆறும், அம்பு முனை மூன்றும் மற்றும் உளி (Chissel) ஒன்றுமாக ஆக 14 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. மேலும் மூன்று இரும்பு பொருட்களை அடையாளம் காண இயலாதவாறு உருக்குலைந்து சிதைந்து காணப்படுகிறது. மேற்படி இரும்புப் பொருட்கள் 12ம் வடக்கு அறையில் 5 இரும்பு பொருட்களும் கிடைத்தன. தெற்கு அறையில் மேற்படி இரும்புப் பொருட்களைக் கொண்டு அறுக்கவும், விலங்குகளை வேட்டையாடவும், வேட்டையாடிய விலங்குகளின் மாமிசம் மற்றும் தோலைத் தனித்தனியாகப் பிரித்தெடுக்கவும் மற்றும் பிற பயன்பாட்டிற்கும் பயன்பட்டிருக்கலாம். அம்புமுனைகள் விலங்குகளை வேட்டையாடுவதற்கு உபயோகப்படுத்தியிருக்கலாம். மேற்படி இரும்புப் பொருட்களை பெருங்கற்கால மக்கள் பயன்படுத்தியதை அறிய முடிகிறது. தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகாப் பகுதியில் மேற்கொண்ட அகழாய்வுகளில் பல இரும்புப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. அதனை நெடுங்கூரில் கிடைத்த இரும்பு தொல்பொருட்கள் உறுதி செய்கின்றன.

## 2. சுடுமண் பொருட்கள் :

நெடுங்கூர் கல்லறையில் சுடுமண்ணாலான பெரிய கருப்பு மற்றும் சிவப்பு நிற பானைகள், கெண்டிகள், நான்கு கால் ஜாடிகள், பிரிமனைகள், கிண்ணங்கள், மதுக்குடுவை (Cup) மற்றும் சில பானைக் குறியீடுகளுடன் கூடிய பானைகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

### (அ) கெண்டிகள் (Spouts) :

நெடுங்கூர் கல்லறையில் நான்கு கெண்டிகள் கண்டெடுக்கப்பட்டன. இவை சுடுமண்ணால் ஆனதாகும். நான்கு கெண்டிகளும் உடைந்த மூக்குப் (Spouts) பகுதிகள் மட்டுமே கிடைக்கின்றன. கெண்டிகள் அனைத்துமே சிவப்பு நிறத்தில் காணப்படுகின்றன. கண்டெடுக்கப்பட்ட நான்கு கெண்டிகளில் மூன்று பெரியவையாகவும் மற்றொன்று சிறியதாகவும் உள்ளன. இச்சுடுமண் கெண்டிகள் குடிநீர் ஊற்றும் ஜாடியாக பயன் படுத்தியிருக்கலாம். பெருங்கற்காலத்தில் மக்கள் இக்கெண்டிகளை கையாண்டிருப்பதை தென்னகத்தில் நடைபெற்ற அகழாய்வு (கல்லறை)களில் கிடைக்கும் தொல்பொருட்களே சான்றாக அமைகின்றன. சிறிய கெண்டியின் நீளம் 3.5 செ.மீ. மற்றும் விட்டம் 3.5 செ.மீ. ஆகும். சுடுமண் கெண்டிகள் அனைத்துமே கல்லறையின் தெற்குப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. பெரிய உடைந்த மூக்குப் பகுதியின் நீளம் 15.5 செ.மீ. மற்றும் விட்டம் 5 செ.மீ. ஆகும்.

### (ஆ) நான்கு கால் ஜாடிகள் (Four Legged Jars) :

நெடுங்கூரில் அகழாய்வு செய்யப்பட்டக் கல்லறையின் தெற்கு மற்றும் வடக்கு அறைகளில் நான்கு கால் ஜாடிகள் பல உடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட ஜாடிகள் ஒன்றுகூட முழுமையாக கிடைக்கவில்லை. இதில் ஒன்று மட்டுமே கால் பகுதி அளவில் கண்டெடுக்கப்பட்டது. கண்டெடுக்கப்பட்ட ஜாடியின் வாய்ப்புறம் மற்றும் கால் பகுதிகள் இன்றி நடுப்பகுதி மட்டுமே கிடைத்தன. ஜாடியின் மேற்புறத்தில் பானை குறியீடு (Graffiti Marks) காணப்படுகின்றன. மேற்படி நான்கு கால் ஜாடிகள் தர்மபுரி, சூளூர் மற்றும் கொடுமணல் அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்றன. இச்சாடிகள் இறந்த குழந்தைகளை (பெருங்கற்காலத்தில்) அடக்கம் செய்வதற்கு பயன்படுத்தியதாகவோ அல்லது

இறந்தவனுக்கு கல்லறையில் படைக்கப்படும் படையல் பொருட்களாகவோ பயன்பட்டிருக்கலாம். இக்கல்லறையில் கண்டெடுக்கப்பட்ட ஜாடியின் மேற் பகுதியில் கிடைக்காமல் இருப்பினும் ஜாடியின் கால் பகுதிகள் (Legged Jars) மொத்தம் 20 தனித்தனி கால்கள் கண்டெடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட 20 கால்களில் 12 கால் பகுதிகள் தெற்கு அறையிலும் எட்டு கால் பகுதிகள் வடக்கு அறையிலுமாக கிடைத்தன. கால் பகுதிகள் பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. அதாவது கால்களின் நீளம் 5 செ.மீ. முதல் 18 செ.மீ. ஆகும். அடிப்பகுதியில் கால்களின் விட்டம் 7.3. செ.மீ. முதல் 3.5 செ.மீ. ஆகும். மேற்படி அனைத்து கால் பகுதிகளும் சிவப்பு நிறத்திலேயே காணப்படுகின்றன.

**(இ) பிரிமனைகள் :**

நெடுங்கூரில் அகழப்பட்ட கல்லறையில் இரண்டு பிரிமனைகள் கண்டெடுக்கபட்டன. இரண்டுமே பெரியவைகளாகும். கரும்பு நிறத்திலுமாக காணப் படுகின்றன. ஒரு பிரிமனையின் உயரம் 12.5 செ.மீ, விட்டம் 18 செ.மீ. ஆகும். மற்றொன்றின் உயரம் 8 செ.மீ. விட்டம் 15.5 செ.மீ. ஆகும். இவ் விரண்டும் கல்லறையின் தெற்கு அறையிலேயே கண்டெடுக்கப்பட்டதாகும். இப்பிரிமனைகள் எதற்காக பயன்பாட்டில் இருந்தது என்றால் பெரிய சமையல் பாத்திரங்கள் அல்லது தண்ணீர் சேமிக்கும் பாத்திரங்களை கவிழாமல் பாது காப்பாக இருப்பதற்காக இப்பிரிமனைகள் பயன்பட்டிருக்கலாம். இவ்விரு பிரிமனைகளும் படையல் பொருட்களாக கல்லறையின் அடியில் பாவப்பட்ட கல்லிலேயே கிடைக்கின்றன.

**(ஈ) மதுக் குடுவை :**

நெடுங்கூர் அகழாய்வுக் கல்லறையின் தெற்கு அறையில் சுடுமண்ணா லான உடைந்த மதுக் குடுவை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இக்குடுவையின் அடிப்பாகம் கூர்மையாகவும் மேற்பகுதி விரிந்தும் காணப்படுகின்றன. இவ் வமைப்பானது மண்ணில் புதைக்க வசதியாக இருக்கும் பொருட்டு மேற்படி அமைப்பில் காணப்படுகின்றன. இக்குடுவையின் உயரம் 12 செ.மீ. உயர மாகும். விட்டம் 14 செ.மீ. உயரமாகும். இக்குடுவை மேற்புறத்தில் சிவப்பு நிறத்திலும் உட்புறத்தில் கருப்பாகவும் மெல்லிய வடிவினில் சற்று வழுவழுப் பாக காணப்படுகின்றன. இக்குடுவை முழுமையாக கிடைக்காமல் அடிப்பகுதி மட்டுமே கிடைக்கின்றன. குடுவை ரோமானியர்களால் பயன்படுத்தப்பட்ட மதுக் குடுவை (Amphorae) போன்று காணப்படுகின்றது. இக்குடுவை உள்ளூரிலேயே தயாரித்து பயன்படுத்தப்பட்ட மதுக் குடுவையாகும்.

**(உ) பானைக் குறியீடுகள் :**

நெடுங்கூர் அகழாய்வுக் கல்லறையில் மொத்தம் 14 பானைக் குறியீடுகள் கண்டெடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட 14 குறியீடுகளில் 8 பெரிய வடிவினிலும் 6 சிறிய வடிவினிலும் காணப்படுகின்றன. மேற்படி அனைத்து பானைக் குறியீடுகளும் பானை ஓட்டுத் துண்டுகளின் மேற்புறத்தில் கீறப்பட்டுள்ளன. இதில் 5 பானைக் குறியீடுகள் வழுவழுப்பான சிவப்பு நிற ஓட்டிலும் 3 குறியீடுகள் கருப்பு-சிவப்பு நிற ஓட்டிலும் கீறப் பட்டுள்ளன. 6 சிறிய பானை குறியீடுகளில் கருப்பு சிவப்பு நிற ஓட்டில் நான்கு குறியீடுகளும் இரண்டு பானைக் குறியீடுகள் சிவப்பு நிற ஓட்டிலும் கீறப்பட்டுள்ளன. ஒரு பானைக் குறியீடானது உடைந்த நான்கு கால் (Four Legged Jar) ஜாடியின் கழுத்துப் பகுதியில் சூரியனின் உருவத்தை 6 கோடுகளால் கீறப்பட்டுள்ளன. இக்கீறலுக்கருகில் (சூரியன்) செங்குத்தான கோடுகள் கீறப்பட்டுள்ளன. இக்கோடுகள் அனைத்துமே சற்று சாய்தளத்தில் (Inclied) கீறப்பட்டுள்ளன. சாய்தளத்தில் காணப்படும் கீறல் கோடுகள் எண்ணிக்கை 6 ஆகும். பானைக் குறியீடு உள்ள நான்கு கால் ஜாடியின் உயரம் 21 செ.மீ-ம், விட்டம் 21 செ.மீ. ஆகும். கல்லறையின் அறைகளில் (Chamber) கிடைக்கும் 14 குறியீடுகளில் சூரியன், ஏணி (Ladder), காவடி (Bearer), ஆறு செங்குத்தான சாய்தள கோடுகள், மற்றும் அடையாளம் காண இயலாத கீறல்கள் காணப்படுகின்றன. முன்பு கூறப்பட்ட சூரியன் அருகில் உள்ள சாய்தள கீறல் கோடுகளைப் போன்று மற்றொரு பானைக் குறியீடு சிவப்பு நிற ஓட்டில் கீறப்பட்டுள்ளன.

நெடுங்கூர் அகழாய்வுக் கல்லறையில் தெற்கு மற்றும் வடக்கு அறை களில் காணப்படும் பானைக் குறியீடுகளும் இப்பகுதியில் அகழப்பட்ட வாழ்விடப் பகுதிகளில் (Habitation) அகழப்பட்டதில் கண்டெடுக்கப்பட்ட பானைக் குறியீடுகளும் ஒரே வடிவினில் (ஒரு சில பானைக் குறியீடுகள் மட்டும்) காணப்படுகின்றன. நெடுங்கூர் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பானைக் குறியீடுகளை விரிவாக ஆய்வு செய்தால் பல வரலாற்றுச் செய்திகள் அறிய உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# முடிவுரை

நெடுங்கூர் அகழாய்வு மூலமாக பொருளாதாரம், பண்பாடு, சமய நெறிகள் ஆகியவை பகுதியில் தொன்மை காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதை அறிய முடிகின்றது. மேலும் தொன்மையான தேசிய பெருவழியில் உள்ள ஊர்கள், கரூர், கொடுமணல், உறையூர், திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வு குழிகளில் கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகளும் நெடுங்கூரில் கிடைத்த தொல்பொருட்களும் ஒத்துள்ளன. மேற்கண்ட நகரங்களில் வாழ்ந்த மக்கள் நன்கு நாகரிகம் அடைந்த மக்களாகவும், தொழில் துறையிலும், அருகில் உள்ள நாடுகளுடன் வணிகத் தொடர்பும் வைத்துள்ளனர் என்பதனை இப்பகுதியில் நடைபெற்ற அகழாய்வு முடிவு கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி.14-ஆம் நூற்றாண்டு வரை உள்ளது என்பதனை தொல்லியல் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

நெடுங்கூரில் பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்கள் கூட்டமாக வாழ்ந்து வேட்டையாடுதல், கால்நடை வளர்த்தல், விவசாயமும் மேற்கொண்டிருந்தனர் எனவும் மற்றும் தொழில் வளர்ச்சியும் பெற்றிருந்தனர் எனவும் அறிய முடிகின்றது.

**பொருளாதார நிலை :**

நெடுங்கூர் அகழாய்வில் சிறிய அளவில் கல்மணிகள் கிடைப்பதினால் கல்மணிகள் செய்யும் தொழிலையும் அறிந்திருந்துள்ளனர் என்றும் அகழாய்வு

குழிகளில் நெசவுத் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் சுடுமண் தக்களிகள் (Spindle Whorls) கிடைப்பதால் நெசவுத் தொழிலையும் அறிந்து வைத்துள்ளனர் என்றும் இரும்பை உருக்கு கசடுகளும் (Iron Slags), இரும்பு பொருட்களும், இரும்பு அம்பு முனைகளும் (Iron arrow head) கிடைப்பதால் இரும்பு தொழிலையும் அறிந்துள்ளனர். சங்கு வளையல் செய்யும் தொழில், சுடுமண் அணிகலன்கள் (Terracotta ornaments) புகைப்பான்கள் (Smoking pipes) கிடைப்பதால் சுடுமண் பொம்மைகள் செய்யும் தொழிலையும் அறிந்து செய்துள்ளனர் எனத் தெரிகின்றது. அமராவதி ஆற்று நீர்பாசனத்தால் விவசாயமும் செய்துள்ளனர் என்பதனை நெடுங்கூர் அகழாய்வு தொல்லியல் சான்றுகள் மூலம் அறியப்படுகின்றது.

**சமுதாய வாழ்க்கை பண்பாடு :**

நெடுங்கூர் பகுதியில் வாழ்ந்த மக்கள் பலவிதமான அணிகலன்களை அணிந்துள்ளனர். மேலும் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற கல்மணிகள், அணி கலண்கள், கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள் அணிகலண்களை அணிந்துள்ளனர்.

| கரூர் மாவட்ட ஈமச்சின்னங்களும் வாழ்விடப் பகுதிகளும் | | | |
|---|---|---|---|
| வ. எண். | ஊர்ப் பெயர்கள் | வட்டம் | ஈமச்சின்னங்கள்/வாழ்விடப் பகுதிகள் |
| 1. | கரூர் (ஆண்டாங்கோயில்) | கரூர் | கற்படுக்கை மற்றும் முதுமக்கள்தாழி வாழ்விடப் பகுதி |
| 2. | ஆத்தூர் | கரூர் | கல்வட்டத்துடன் கூடிய கற்பதுக்கை |
| 3. | மண்மங்கலம் | கரூர் | கல்வட்டம் |
| 4. | மூக்கானாங்குறிச்சி | கரூர் | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 5. | நத்தமேடு | கரூர் | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 6. | பஞ்சாமாதேவி | கரூர் | வாழ்விடப்பகுதி |
| 7. | புகளூர் | கரூர் | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 8. | புன்னம் | கரூர் | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 9. | வேட்டமங்கலம் | கரூர் | கற்பதுக்கைகளுடன் கூடிய முதுமக்கள் தாழி மற்றும் வாழ்விடப்பகுதி |
| 10. | காருடையாம்பாளையம் | கரூர் | கல்வட்டம், கற்குவியலுடன் கூடிய கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 11. | அருமைக்காரன்பட்டி | கரூர் | கல்வட்டம் |
| 12. | கேதம்பட்டி | கரூர் | கற்பதுக்கை மற்றும் முதுமக்கள்தாழி |
| 13. | வெள்ளியணை | கரூர் | வாழ்விடப்பகுதி |
| 14. | சனப்பிரட்டி | கரூர் | முதுமக்கள்தாழி மற்றும் வாழ்விடப் பகுதி |
| 15. | சோமூர் | கரூர் | வாழ்விடப்பகுதி |
| 16. | திருமுக்கூடலூர் | கரூர் | வாழ்விடப்பகுதி |
| 17. | உப்புப்பாளையம் | கரூர் | கல்வட்டம் |
| 18. | வி.ஜி.பி.நகர் (கரூர்) | கரூர் | கற்குவியலுடன்கூடிய கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 19. | திருக்காம்புலியூர் | கரூர் | வாழ்விடப்பகுதி |
| 20. | சின்னான்டாங்கோயில் | கரூர் | வாழ்விடப்பகுதி (ம) முதுமக்கள்தாழி |

| | | | |
|---|---|---|---|
| 21. | மேல் நெடுங்கூர் | அரவக்குறிச்சி | கல்வட்டம், கற்குவியலுடன்கூடிய கல்வட்டம் மற்றும் முதுமக்கள் தாழி |
| 22. | கீழ் நெடுங்கூர் | அரவக்குறிச்சி | வாழ்விடப்பகுதி |
| 23. | கூடலூர் | அரவக்குறிச்சி | கல்வட்டத்துடன்கூடிய கற்பதுக்கை |
| 24. | மலைக்கோயிலூர் | அரவக்குறிச்சி | கல்வட்டம், கற்பதுக்கை (ம) வாழ்விடப்பகுதி |
| 25. | மடைக் காட்டுப்புதூர் | அரவக்குறிச்சி | கல்வட்டம், கற்குவியலுடன்கூடிய கல்வட்டம் |
| 26. | நாகம்பள்ளி | அரவக்குறிச்சி | கல்வட்டம் |
| 27. | முன்னூர் | அரவக்குறிச்சி | கற்குவியலுடன் கூடிய கல்வட்டம் கற்பதுக்கைகளுடன் கூடிய முது மக்கள் தாழி மற்றும் வாழ்விடப்பகுதி |
| 28. | ஒத்தம்பட்டி | அரவக்குறிச்சி | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 29. | பள்ளப்பாளையம் | அரவக்குறிச்சி | கற்பதுக்கை மற்றும் வாழ்விடப்பகுதி |
| 30. | பவித்திரம் | அரவக்குறிச்சி | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 31. | பரமத்தி | அரவக்குறிச்சி | கற்குவியலுடன் கூடிய கல்வட்டம் |
| 32. | இராமக்கவுண்டன்புதூர் | அரவக்குறிச்சி | கல்வட்டத்துடன்கூடிய கற்பதுக்கை |
| 33. | ரெங்கநாதபுரம் | அரவக்குறிச்சி | கற்குவியலுடன்கூடிய கல்வட்டம் |
| 34. | கொத்தபாளையம் | அரவக்குறிச்சி | வாழ்விடப்பகுதி |
| 35. | மேல்கேத்தம்பட்டி | அரவக்குறிச்சி | கற்குவியலுடன் கூடிய கல்வட்டம் மற்றும் வாழ்விடப் பகுதி |
| 36. | கீழ்கேத்தம்பட்டி | அரவக்குறிச்சி | கல்வட்டம், கற்குவியலுடன்கூடிய கல்வட்டம் மற்றும் கற்பதுக்கை களுடன் கூடிய முதுமக்கள் தாழி |
| 37. | மகாலட்சுமிபுரம் | அரவக்குறிச்சி | கல்வட்டம் |
| 38. | பசுபதிபாளையம் | அரவக்குறிச்சி | கற்குவியலுடன் கூடிய கல்வட்டம், கல்வட்டம் |
| 39. | கோயிலூர் | அரவக்குறிச்சி | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 40. | கரைபாளையம் | அரவக்குறிச்சி | கல்வட்டம் |
| 41. | வடுகனூர் | அரவக்குறிச்சி | கற்குவியலுடன் கூடிய கல்வட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 42. | வாழ்நாயக்கன்பட்டி | அரவக்குறிச்சி | கல்வட்டம், முதுமக்கள் தாழி மற்றும் வாழ்விடப்பகுதி |
| 43. | இராமநாதபுரம் | அரவக்குறிச்சி | கல்வட்டத்துடன்கூடிய கற்படுக்கை |
| 44. | காளிப்பாளையம் | அரவக்குறிச்சி | கல்வட்டம் |
| 45. | வெஞ்சமாக்கூடலூர் | அரவக்குறிச்சி | கல்வட்டம் மற்றும் வாழ்விடப்பகுதி |
| 46. | செங்காளிப்பாளையம் | அரவக்குறிச்சி | வாழ்விடப்பகுதி |
| 47. | தென்னிலை | அரவக்குறிச்சி | கல்வட்டம் மற்றம் வாழ்விடப்பகுதி |
| 48. | மாயனூர் | கிருஷ்ணராயபுரம் | கற்குவியலுடன்கூடிய கல்வட்டம் |
| 49. | மணவாசி | கிருஷ்ணராயபுரம் | வாழ்விடப்பகுதி |
| 50. | பொரணி | கிருஷ்ணராயபுரம் | கல்வட்டம் மற்றும் கற்பதுக்கை |
| 51. | புதுக்கோட்டை | கிருஷ்ணராயபுரம் | வாழ்விடப்பகுதி |
| 52. | பழைய செயங்கொண்ட சோழபுரம் | கிருஷ்ணராயபுரம் | வாழ்விடப்பகுதி |
| 53. | மகாதானபுரம் | கிருஷ்ணராயபுரம் | வாழ்விடப்பகுதி |
| 54. | மேட்டு திருக்காம்புலியூர் | கிருஷ்ணராயபுரம் | வாழ்விடப்பகுதி |
| 55. | ஆதிநத்தம் | குளித்தலை | வாழ்விடப்பகுதி |
| 56. | வைகை நல்லூர் (குண்டாங்கல்பாறை) | குளித்தலை | வாழ்விடப்பகுதி |
| 57. | குறும்பநத்தம் | குளித்தலை | வாழ்விடப்பகுதி |
| 58. | கோட்டைப்பட்டி | குளித்தலை | வாழ்விடப்பகுதி |
| 59. | கூடலூர் | குளித்தலை | வாழ்விடப்பகுதி |
| 60. | நல்லூர் | குளித்தலை | வாழ்விடப்பகுதி |

# OCCURRENCE OF POTTERIES
## (ANALYSIS OF POTTERIES)

**SITE : NEDUNGOUR, KARUR DIST.,** **TRENCH NO.: NDR-I**

| Sl. No. | Depth | Locus | Coarse Red Ware | Red Slip Ware | B+R Ware (Coarse) | B+R Ware (Slip) | Black Slip Ware | Brown Slip Ware | Russet Coated Ware | Amphorae Ware | Arretine Ware | Rouletted Ware | Decorated Ware |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 10 cm | 0-V 0'-V' | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2. | 20 cm | 0-V 0'-V' | 750 | 44 | 169 | - | 2 | - | - | - | - | - | 10 |
| 3. | 30 cm | " | 540 | 28 | 240 | - | 1 | - | - | - | - | - | 6 |
| 4. | 40 cm | " | 180 | 24 | 130 | - | 4 | - | - | - | - | - | - |
| 5. | 50 cm | " | 220 | 20 | 125 | - | - | - | - | - | - | - | - |
| 6. | 60 cm | " | 480 | 17 | 84 | _ | 2 | - | 1 | - | - | - | -- |
| 7. | 70 cm | " | 240 | 11 | 66 | - | - | - | 5 | - | - | - | 2 |
| 8. | 80 cm | " | 240 | 26 | 87 | 1 | - | - | 1 | - | - | - | 1 |
| 9. | 90 cm | " | 225 | 23 | 102 | - | 5 | - | 1 | - | - | - | 3 |
| 10. | 100 cm | " | 180 | 23 | 78 | - | 1 | - | 1 | - | - | - | 4 |
| 11. | 110 cm | " | 120 | 8 | 57 | - | - | - | - | - | - | - | 4 |
| 12. | 120 cm | " | 80 | 4 | 4 | - | 1 | - | - | - | - | - | 1 |
| 13. | 130 cm | " | 70 | 4 | 1 | - | 1 | - | - | - | - | - | - |
| 14. | 140 cm | " | - | - | - | - | - | - | - | - | - | - | - |

## OCCURRENCE OF POTTERIES
## (ANALYSIS OF POTTERIES)

**SITE : NEDUNGOUR, KARUR DIST..** **TRENCH NO.: NDR-II**

| Sl. No. | Depth | Locus | Coarse Red Ware | Red Slip Ware | B+R Ware (Coarse) | B+R Ware (Slip) | Black Slip Ware | Brown Slip Ware | Russet Coated Ware | Amphorae Ware | Arretine Ware | Rouletted Ware | Decorated Ware |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 5 cm | 0-V . 0'-V' | 92 | 18 | 46 | - | 1 | - | 3 | - | - | - | - |
| 2. | 15 cm | " | 180 | 12 | 90 | 40 | - | - | 3 | - | - | - | - |
| 3. | 20 cm | " | 150 | 9 | 140 | - | 1 | 1 | 4 | - | - | - | 2 |
| 4. | 30 cm | " | 225 | 9 | 85 | - | - | - | 3 | - | - | - | 4 |
| 5. | 40 cm | " | 325 | 10 | 45 | - | 1 | - | 4 | - | - | - | - |
| 6. | 50 cm | " | 120 | 4 | 26 | - | 1 | - | 4 | - | - | - | 8 |
| 7. | 65 cm | " | - | - | - | - | - | - | - | - | - | - | - |

# POTTERIES
## (ANALYSIS OF POTTERIES)

**SITE : NEDUNGOUR, KARUR DIST.,** **TRENCH NO.: NDR-III**

| Sl. No. | Depth | Locus | Coarse Red Ware | Red Slip Ware | B+R Ware (Coarse) | B+R Ware (Slip) | Black Slip Ware | Brown Slip Ware | Russet Coated Ware | Amphorae Ware | Arretine Ware | Rouletted Ware | Decorated Ware |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 10 cm | 0-V 0'-V' | 325 | 33 | - | 64 | 6 | - | 8 | - | - | - | 12 |
| 2. | 20 cm | " | 250 | 21 | - | 54 | - | - | 2 | - | - | 3 | 7 |
| 3. | 30 cm | " | 325 | 34 | - | 67 | 10 | - | 7 | - | - | 9 | 16 |
| 4. | 35 cm | " | 71 | 10 | - | 24 | 2 | - | - | - | - | 1 | 2 |
| 5. | 40 cm | " | 250 | 17 | - | 49 | - | - | - | - | - | - | 20 |
| 6. | 50 cm | " | 350 | 37 | - | 51 | 13 | - | 3 | - | - | 2 | 18 |
| 7. | 60 cm | " | 475 | 25 | - | 64 | 4 | - | 2 | - | - | - | 17 |
| 8. | 70 cm | " | 450 | 37 | - | 51 | - | 6 | 3 | - | - | - | 15 |
| 9. | 80 cm | " | 201 | 35 | - | 47 | 5 | - | - | - | - | - | 11 |
| 10. | 90 cm | " | 122 | 5 | - | 15 | 3 | - | 1 | - | - | - | 11 |
| 11. | 1.00 mt. | " | 133 | 7 | - | 50 | - | - | - | - | - | 1 | 17 |
| 12. | 1.10 cm | " | 164 | 11 | 50 | - | - | - | - | - | - | - | 18 |
| 13. | 1.20 cm | " | 145 | 15 | 81 | 7 | - | - | - | - | - | - | 10 |
| 14. | 1.30 cm | " | 115 | 17 | - | 41 | - | - | - | - | - | - | - |
| 15. | 1.40 mt. | " | 115 | - | - | - | - | - | - | - | - | - | - |

# POTTERIES
## (ANALYSIS OF POTTERIES)

**SITE : NEDUNGOUR, KARUR DIST.,** **TRENCH NO.: NDR-IV**

| Sl. No. | Depth | Locus | Coarse Red Ware | Red Slip Ware | B+R Ware (Coarse) | B+R Ware (Slip) | Black Slip Ware | Brown Slip Ware | Russet Coated Ware | Amphorae Ware | Arretine Ware | Rouletted Ware | Decorated Ware |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 5 cm | " | 128 | 6 | 2 | - | - | - | - | - | - | - | - |
| 2. | 10 cm | " | 150 | 5 | 10 | - | - | - | - | - | - | - | - |
| 3. | 15 cm | " | 160 | 14 | 15 | - | - | - | - | - | - | - | - |
| 4. | 20 cm | " | 240 | 7 | 12 | - | - | - | - | - | - | - | - |
| 5. | 30 cm | " | 560 | 17 | 20 | - | - | - | - | - | - | - | - |
| 6. | 40 cm | " | 585 | 15 | 9 | - | - | - | - | - | - | - | - |
| 7. | 45 cm | " | 466 | - | 7 | - | - | - | 1 | - | - | - | - |
| 8. | 55 cm | " | 480 | 13 | 12 | - | - | - | - | - | - | - | - |
| 9. | 60 cm | " | 566 | 18 | 14 | - | 2 | - | - | - | - | - | - |
| 10. | 70 cm | " | 390 | 35 | 20 | - | - | - | - | - | - | - | - |
| 11. | 75 cm | " | 195 | 23 | 7 | - | - | - | - | - | - | - | - |
| 12. | 80 cm | " | 235 | 32 | 11 | - | - | - | - | - | - | - | - |
| 13. | 90 cm | " | 630 | 60 | 16 | - | - | - | - | - | - | - | - |
| 14. | 95 cm | " | 40 | 13 | 5 | - | - | - | - | - | - | - | - |

# POTTERIES
## (ANALYSIS OF POTTERIES)

**SITE : NEDUNGOUR, KARUR DIST.,** **TRENCH NO.: NDR-IV**

| Sl. No. | Depth | Locus | Coarse Red Ware | Red Slip Ware | B+R Ware (Coarse) | B+R Ware (Slip) | Black Slip Ware | Brown Slip Ware | Russet Coated Ware | Amphorae Ware | Arretine Ware | Rouletted Ware | Decorated Ware |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15. | 1.00 mt | 0-IV 0'-IV' | 310 | 41 | 12 | - | 4 | - | - | - | - | - | - |
| 16. | 1.10 mt | " | 315 | 47 | 28 | - | 1 | - | - | - | - | - | - |
| 17. | 1.20 mt | " | 515 | 38 | 22 | - | - | - | - | - | - | - | - |
| 18. | 1.25 mt | " | 440 | 21 | 17 | - | - | - | - | - | - | - | - |
| 19. | 1.30 mt | " | 720 | 58 | 21 | - | 1 | - | - | - | - | - | - |
| 20. | 1.40 mt | " | 315 | 26 | 17 | - | - | - | - | - | - | - | - |
| 21. | 1.50 mt | 0'-II 0'-II' | 174 | 24 | 12 | - | - | - | - | - | - | - | - |
| 22. | 1.60 mt | " | 252 | 31 | 16 | - | - | - | - | - | - | - | - |
| 23. | 1.70 mt | " | 400 | 34 | 17 | - | - | - | - | - | - | - | - |
| 24. | 1.80 mt | " | 230 | 17 | 15 | - | - | - | - | - | - | - | - |
| 25. | 1.90 mt | " | 285 | 36 | 26 | - | - | - | - | - | - | - | - |
| 26. | 2.00 mt | " | 215 | 12 | 22 | - | - | - | - | - | - | - | - |
| 27. | 2.10 mt | " | 77 | 6 | 4 | - | - | - | - | - | - | - | - |
| 28. | 2.20 mt | " | 325 | 28 | 25 | - | - | - | - | - | - | - | - |

## தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்

| வ. எ. | ஊர் | மாவட்டம் | அகழாய்வு நடைபெற்ற ஆண்டு | தொல்பொருட்கள் |
|---|---|---|---|---|
| 1. | அப்புக்கல்லு | வேலூர் | 1977-1979 | மட்கலயங்கள், இரும்பாலான அம்பு முனைகள், கத்திகள், சுடுமண் மணிகள், சங்கு வளையல்கள். |
| 2. | அமிர்தமங்கலம் | திருவள்ளூர் | 1944-48 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், எலும்புகள் |
| 3. | அனுப்பானடி | மதுரை | 1887 | ஈமப்பேழைகள், மட்கலயங்கள் |
| 4. | ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 1876, 2004 | ஈமத்தாழிகள், மட்கலன்கள், இரும்புப் பொருட்கள் தங்க அணிகள், வெண்கலம் மற்றும் செம்பு உருவங்கள், கல்மணிகள். |
| 5. | ஆரணிப்பட்டி | திருச்சி | 1934-35 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள். |
| 6. | ஆரோவில் | விழுப்புரம் | 1984-85 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், இரும்புப் பொருட்கள் |
| 7. | ஆனைமலை | கோவை | 1970 | கல் பதுக்கை |
| 8. | ஒடுகத்தூர் | வேலூர் | 1916 | இடுதுளையுடன் கல் பதுக்கை, மட்கலயங்கள், இரும்புக் கருவிகள் |
| 9. | கடமலைப்புத்தூர் | காஞ்சிபுரம் | 1908-09 | மூன்று கால்கள் உடைய ஈமத்தாழி, மட்கலயங்கள். |

| தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வ. எ. | ஊர் | மாவட்டம் | அகழாய்வு நடைபெற்ற ஆண்டு | தொல்பொருட்கள் |
| 10. | கடையநல்லூர் | திருநெல்வேலி | 1935-36 | மட்கலயங்கள், இரும்புப் பொருட்கள். |
| 11. | கம்பர்மேடு | நாகப்பட்டினம் | 1982-83 | குறியீடுகள், கருப்பு சிவப்பு வண்ண ஓடுகள் |
| 12. | கலையப்பட்டி | புதுக்கோட்டை | 1937 | ஈமச்சின்னங்கள் - கல் வட்டங்கள் |
| 13. | கல்லேரிமலை | வேலூர் | 1980 | கல் பதுக்கை, மட்கலயங்கள். |
| 14. | களக்குடிப்பட்டி | புதுக்கோட்டை | 1937-38 | கல் வட்டம், கல்லறை, மட்கலயங்கள். |
| 15. | கனராபாளையம் | கோவை | 1913-14 | இடுதுளையுடன் கல்லறை, நான்கு கால்களுடன் ஈமத்தாழி |
| 16. | கனியாம்பூண்டி | கோவை | 1910-11 | மட்கலயங்கள் |
| 17. | கீழ்நத்தம் | திருநெல்வேலி | 1903-04 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், இரும்பு மற்றும் வெண்கலப் பொருட்கள் |
| 18. | கீழ்ப்பாக்கம் | சென்னை | 1934-35 | ஆறு கால்களுடன் ஈமப்பேழை, இரும்புப் பொருட்கள், மட்கலயங்கள். |
| 19. | குன்னத்தூர் | காஞ்சிபுரம் | 1955-58 | கல்வட்டம், ஈமப்பேழை, மூன்று கால் ஈமத்தாழி, இரும்புப் பொருட்கள், ஊரிருக்கைப் பகுதி. |
| 20. | குடிகாடு | கடலூர் | 1979 | கல்லறை, மட்கலயங்கள். |
| 21. | கொடுமணல் | ஈரோடு | 1985-86<br>1989-90<br>1997 | இரு துளையுடன் கல்லறைகள், மட்கலன்கள் கல்மணிகள், வெண்கல, செப்புப் பொருட்கள் ஊரிருக்கைப் பகுதி, குறியீடுகள் |

## தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்

| வ. எ. | ஊர் | மாவட்டம் | அகழாய்வு நடைபெற்ற ஆண்டு | தொல்பொருட்கள் |
|---|---|---|---|---|
| 22. | கொல்லூர் | விழுப்புரம் | 1876 | இடுதுளையுடன் கல்லறை |
| 23. | கொற்கை | தூத்துக்குடி | 1968-69 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், கல்மணிகள் சங்கு வளையல்கள், இரும்புப் பொருட்கள் |
| 24. | கோவலன் பொட்டல் | மதுரை | 1980 | ஈமத்தாழிகள், மட்கலன்கள், இரும்புப் பொருட்கள், கல்மணிகள், செம்பு மோதிரம், செப்புக்காசு, சங்கு வளையல்கள் |
| 25 | கோரிமேடு | பாண்டிச்சேரி | 1934-35 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், வெண்கல மற்றும் செப்புப் பொருட்கள் |
| 26. | சானூர் | காஞ்சிபுரம் | 1950-52 | கல் திட்டைகள், கல்லறைகள், ஈமப்பேழைகள், மட்கலயங்கள், குதிரை லாடம், இரும்புப் பொருட்கள். |
| 27. | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை | 1934-35<br>1975-76 | கற்பதுக்கை, ஈமத்தாழிகள், மட்கலயங்கள் இரும்புப் பொருட்கள். |
| 28. | சிறுமுகை | கோவை | 1913-14 | கல் வட்டங்கள், ஈமப் பேழைகள், ஈமத்தாழிகள், மட்கலயங்கள். |
| 29. | சூரந்தப்பட்டி | திருச்சி | 1934-35 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள், சங்கு வளையல்கள் |
| 30. | சூலூர் | கோவை | 1946-47 | கற்பதுக்கை, மட்கலயங்கள் |

## தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்

| வ. எ. | ஊர் | மாவட்டம் | அகழாய்வு நடைபெற்ற ஆண்டு | தொல்பொருட்கள் |
|---|---|---|---|---|
| 31. | செட்டிப்பாளையம் | கோவை | 1946-47 | ஈமத்தாழிகள், ஆட்டுருவ மூடியுடன் கூடிய செப்புக்கிண்ணம் |
| 32. | சோத்துக்கேணி | பாண்டிச்சேரி | 1934-35 | 16 கால்களுடன் ஈமப்பேழை, குறியீடுகள், மட்கலயங்கள், வெண்கலக் கிண்ணங்கள் |
| 33. | தச்சம்பட்டி | திருச்சி | 1934-35 | தாழிகள், மட்கலயங்கள். |
| 34. | தாடம்பட்டி | மதுரை | 1888 | ஈமத்தாழிகள் |
| 35. | திருக்கட்டளை | புதுக்கோட்டை | 1917 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 36. | திருத்து | திருநெல்வேலி | 1903-04 | ஈமத்தாழி, மட்கலயங்கள், கல்மணிகள், இரும்பு மற்றும் வெண்கலப் பொருட்கள். |
| 37. | திருப்பூர் | புதுக்கோட்டை | 1938-39 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள். |
| 38. | திருவக்கரை | கடலூர் | 1984-85 | கல்லறைகள், மட்கலயங்கள், பவளமணி, வெள்ளி வளையம், இரும்புப் பொருட்கள். |
| 39. | துவரை மான் | மதுரை | 1887 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள். |
| 40. | தொடையூர் | புதுக்கோட்டை | 1934-35 | ஈமத்தாழிகள், கல்லறைகள் |
| 41. | நத்தமேடு | பாண்டிச்சேரி | 1934-35 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள். |
| 42. | நல்லம்பட்டி | ஈரோடு | 1875 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள். |
| 43. | நாட்டுக்கல் பாளையம் | கோவை | 1889 | இடுதுளையுடன் கல்லறைகள். |


## தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்

| வ. எ. | ஊர் | மாவட்டம் | அகழாய்வு நடைபெற்ற ஆண்டு | தொல்பொருட்கள் |
|---|---|---|---|---|
| 44. | நிச்சாம்பாளையம் | ஈரோடு | 1875 | இடுதுளையுடன் கல்லறைகள், கல் வட்டங்கள் |
| 45. | பல்லாவரம் | காஞ்சிபுரம் | 1863 | ஈமத்தாழிகள், 16 கால்களுடன் ஈமப்பேழை, ஆறு கால்களுடன் ஈமத்தாழி, இரும்புப் பொருட்கள், சுடுமண் பொருட்கள். |
| 46. | பழநி மலை | திண்டுக்கல் | 1928 | கல்லறை, மட்கலயங்கள். |
| 47. | பறவை | மதுரை | 1888 | ஈமத்தாழிகள், இரும்புப் பொருட்கள், கல்மணிகள் |
| 48. | புல்வயல் | புதுக்கோட்டை | 1917 | ஈமத்தாழிகள், இரும்புப் பொருட்கள். |
| 49. | பெருமாள் மலை | மதுரை | 1940-41 | ஈமத்தாழிகள், மட்கலன்கள் |
| 50. | பேரூர் | கோவை | 1970-71 -2002 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 51. | பெரியநத்தம் | மதுரை | 1888 | ஈமத்தாழிகள், மட்கலயங்கள் |
| 52. | பையம்பள்ளி | வேலூர் | 1964-65 1967-68 | வட்ட வடிவக் குச்சிநடுகுழிகள், கற்களால் பாவப்பட்ட தரைப்பகுதி, மட்கலயங்கள். |
| 53. | மயிலாடும்பாறை | கிருஷ்ணகிரி | 2003 | கல் பதுக்கை, குறியீடுகளுடன் மட்கலயங்கள், இரும்பு அம்புமுனைகள், கத்தி, கோடாரி |
| 54. | மல்லப்பாடி | கிருஷ்ணகிரி | 1978 | மட்கலயங்கள் |
| 55. | மலையாம்பட்டு | வேலூர் | 1970-71 | மட்கலயங்கள். |

## தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்

| வ. எ. | ஊர் | மாவட்டம் | அகழாய்வு நடைபெற்ற ஆண்டு | தொல்பொருட்கள் |
|---|---|---|---|---|
| 56. | மாகிநாய்க்கன் பாளையம் | கோவை | 1889 | கல்வட்டங்கள், கல்லறைகள், மட்கலயங்கள் |
| 57. | முத்தராபாளையம் | பாண்டிச்சேரி | 1934-35 | ஈமத்தாழிகள், குறியீடுகளுடன் மட்கலயங்கள் |
| 58. | மேல்சாத்தமங்கலம் | பாண்டிச்சேரி | 1983 | மட்கலயங்கள் |
| 59. | மோட்டூர் | திருவண்ணாமலை | 1978-79 | தாய் தெய்வக்கல், இரு துளையுடன் கல்லறை ஈமப் பேழைகள், மட்கலயங்கள். |
| 60. | வரிக்கல் | விழுப்புரம் | 1903-04 | கற்கிடை, மட்கலயங்கள். |
| 61. | தாண்டிக்குடி | திண்டுக்கல் | 2004 | தாழி, கல் பதுக்கை, 50-க்கு மேற்பட்ட மட்கலன்கள், இரும்பு வாள்கள், கத்திகள், 3530-க்கும் மேற்பட்ட சூதபவளமணிகள், பளிங்குக் கல்மணிகள். |


# LOCATION OF THE NEDUNGOUR EXCAVATION SITES



# KARUR DISTRICT


Scale – 2,50,000

# NEDUNGOUR




# LOCATION OF THE NEDUNGOUR VILLAGE

**ARAVAKURICHI TALUK** **NEDUNGOUR**
**KARUR DISTRICT**
**SCALE - 1,00,000**



# NEDUNGOUR VILLAGE MAP-II




## NEDUNGOUR VILLAGE MAP-II




# தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பெருங்கற்கால இடங்கள்

(எண்கள் பட்டியலிலுள் இடங்களைக் குறிக்கும்)




# குறியீடுகள் பொறித்த ஐந்து கால் மண் குடுவை








# குறியீடுகள் பொறித்த மட்பாண்டத் துண்டுகள்



## பெருங்கற்கால இரும்பு கருவிகள்








மான்கொம்புகள்





சுடுமண்
வட்ட
சில்லுகள்



சங்கு
வளையல்
துண்டுகள்